ஆனந்த போதினி

Vol. 8. No. 7. Jan. 1927.

JL
9M211, N6AB
N23.8.7
224348

Regd. No. M. 1190 Jan 1923 துந்துபி௵ தை௴

ஆனந்த போதினி

ANANDA BODHINI.

Vol. 8. No. 7.

பொருளடக்கம்

		பக்கம்
1.	கடவுள் வணக்கம்	... 241
2.	வர்த்தகம்	... 243
3.	ஜீவவதையும் [illegible]ம்மதியரும்	... 249
4.	கம்பராமாயண நீதிச்செய்யுள்	... 255
5.	சர்வம்-சக்திமயம்-ஜகத்	... 258
6.	"இரண்டு பழுபொய்கள்" என்ற பழமோசம்	... 258
7.	மாணவர்களுக்குஹிதோபதேசம்	261
8.	தமிழ்மாதருக்கு ஆங்கிலக் கல்வி அவசியமா?	... 263
9.	இருதயவியாதிஅல்ல தபித்தவாய்வு	266
10.	இல்லறம்—தன்மம்	... 268
11.	பகவத்கீதை வசனம்	... 2[illegible]0
12.	புராதன இந்திய நன்னாடு	... 274
13.	தபால் கொள்ளைக்காரர்கள்	... 276
14.	பொதுசமாசாரங்கள்	... 279
15.	பஞ்சாங்கம்	... 280
16.	விளம்பரங்கள்.	

" ஆனந்த போதினி "

சந்தா விவரம்.

		ரூ. அ. பை.
வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட	இந்தியா, பர்மா, ஸிலோன்	1—0—0
	பினாங், ஸிங்கபூர், தென்ஆப்ரிகா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு	1—4—0
நடந்துகொண் டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை		0—2—0
சென்ற வருடங்களுடைய தனிச் சஞ்சிகை விலை		0—3—0

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

---

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாயிப் பெயரை எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தா தொகையை முன்னாடி செலுத்தியாவது அல்லது வி.பி. யில் பணம் கட்டியாவது பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடிமாத சஞ்சிகை முதல், சேர்த்தனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 2-அணா வோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணா வாகையால்) வி. பி. கமிஷன் 2-அணா வி. பி. க்கு தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-4-6 அதாவது 5-அணா சேர்த்து ரூபா 1-5-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினால் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னாடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) [illegible]னும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம்தேதி வரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ் மாதமுடிவிற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர்கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதா[illegible]கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்தி[illegible] வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்து கொண்டு நமக்கு[illegible] புதுவி[illegible]த்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம்பொறுப்பாளி யல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதுங் கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரீப்ளை கார்டாவது தபாற் தில்லையாவது அனுப்பினாலன்றி விடையளிக்கப்பட மாட்டாது.

Life Subscription ஜீவிய சந்தா	இந்தியா, பர்மா, சிலோன்	ரூபா	15—0—0
	அன்னிய நாடுகளுக்கு	,,	20—0—0

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு		...	ரூபா.	30-[illegible]0—0
அரைப் பக்கத்திற்கு	,,	...	,,	16[illegible]0—0
கால் பக்கத்திற்கு	,,	...	,,	8[illegible]8—0

எப்போதும் முழுத்தொகையும் முன் பணமாய் அனுப்பப்படவேண்[illegible]

நா. முனிசாமி முதலியார், " ஆனந்தபோதினி " ஆ[illegible]
கே. 6, வெங்கடேச மேஸ்திரி தெருவு, சௌகார்பேட்டை, [illegible]

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 8	துந்துபிஸு தைமீ கஉ 1923ஸு ஜனவரிமீ 14உ	பகுதி 7

கடவுள் வணக்கம்.

ஔவிய மிருக்கா னென்கின்ற வாணவ
மடைந்திட் டிருக்க லோப
மருளின்மை கூடக் கலந்துள் ளிருக்கமே
லாசா பிசாசு முதலாம்
வெவ்விய குணம்பல விருக்குமென் னறிவூடு
மெய்யனீ வீற்றிருக்க
விதியில்லை யென்னிலோ பூரண னெனும்பெயர்
விரிக்கினுரை வேறு முளதோ
கௌவுமல மாகின்ற நாகபா சத்தினாற்
கட்டுண்ட உயிர்கண் மூர்ச்சை
கடிதகல வலியவரு ஞானசஞ் சீவியே
கதியான பூமி நடுவுட்
செவ்வி தின் வளர்ந்தோங்கு திவ்யகுண மேருவே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

மெய்யான தன்மை விளங்கினுல் யார்க்கேனும்
பொய்யான தன்மை பொருந்துமோ—வையாவே
மன்னுகி ராசையின்னும் வந்ததல்ல வுன்னடிமை
யென்னுவிலை யெய்துமா றென்.

அறியாமை மேலிட் டறிவின்றி நிற்குங்
குறியேற் கறிவென்ற கோலம்—வறிதேயா
நீயுணர்த்த நானுணரு நேசத்தா லோவறிவென்
தேயெனக்கோர் நாமமிட்ட தே.

அரும்பொருள் விளக்கம்.

"என்னிடம் பொறாமை, ஆணவம், உலோபம், இரக்க மின்மை பேராசை முதலிய பல துர்க்குணங்க ளிருப்பதால் கடவுளாகிய நீ என் உள்ளத்தில் வீற்றிருக்க நியாயமில்லை யென்று கூறவிடமில்லை. ஏனெனில் நீ பரிபூரணன், அதாவது எங்கும் நிறைந்திருப்பவன் ஆதலின் என் உள்ளத்தில் மட்டும் இல்லை யெனின் நீ பரிபூரணன் என்பது பொய்யாய் விடும்" என்பது பொருள்.

"கௌவுமலமாகின்ற.........ஞான சஞ்சீவியே"

ஆணவமலத்தை நாகபாசமாகவும், ஆண்டவனருளால் ஆணவம் நீங்குவதால் அவரை ஞானமாகிய சஞ்சீவியாகவும் உருவகப்படுத்திக் கூறினர். ஞானோதயமின்றி ஆணவமலம் நீங்காது; ஆண்டவ னருளின்றி ஞானோதய முண்டாகி மலமாயை நீங்காது அல்லது மலமாயை நீங்கி ஞானோதயம் உண்டாகாது. ஏனெனில் ஒன்றின் ஒழிவே மற்றொன்றின் தோற்றமாகும்.

கதியான பூமி நடுவுள்—மோக்ஷத்திற் காதாரமான (ஞானசத்த பூமிகளில்) மத்திய பூமியாகிய சத்துவாபத்தி என்னும் நான்காவது பூமியில்.

அப்படிக்கின்றி 'மோக்ஷமாகிய பூமியில்' என்று பொருள் கூறுவது பொருத்தமாகக் காணப்படவில்லை. என்னையெனின், மோக்ஷமான பூமியில் நடு என்றும் ஆதி அந்தம் என்றும் இல்லை. அங்கு வளர்ந்தோங்கும் காரியமுமில்லை. அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபமே 'மோக்ஷ வீடு' ஆதலின் அங்கு ஆதி, நடு, அந்தம் என்பதும் குறைதலும் வளர்தலு மின்றாம்.

ஈண்டு 'பூமிநடுவுள்' என்பதை 'நடுபூமியுள்' என்றே மாற்றிப்பொருள்கோடல் பொருத்தமாகும். சத்துவா பத்தி யென்ற நான்காவது பூமியே ஆன்மதரிசனம் உண்டாகும், அதாவது ஞானோதய முண்டாகும் பூமியாகும். இந்த நான்காம் பூமியையடைந்தோரே பிரம்மவித்துக்கள் என்ற ஜீவன் முத்தராவர்.

* * * * *

சொன்ன நடுப் பூமிவந்த ஞானிகளே பிரம்மவித்தாந் தூயமுத்தர்

* * * * (கைவல்யம்)

இந்த நிலையில் முதலில் ஆன்மா அணுவுக்கணுவாய் அதிசூக்கும மாகவே தோன்றும். பிறகே தற்போதம் தேய்ந்துதேய்ந்து குறையக்குறைய, அகண்டாகார நிலைதோன்றி முடிவில் தற்போத ஒழிவில் ஞாதுரு ஞேயங்களற்று அகண்டாகார பரிபூரணானந்த நிலை சித்திக்கு மாதலின், அந்த பூமியில் ஞானம் வளர்ந்தோங்குந் தன்மையுண்டு. அதாவது சொரூபஞானம் விர்த்தியான மாகின்றது.

224348

2. மெய்யான தன்மை=நித்தியமாயுள்ளது இன்னது என்ற உண்மை.
பொய்யான தன்மை=மாயையின் காரியமான நிலையற்ற பொருள்களை மெய்யென்று கருதும் தன்மை.

சாதாரணமாய் ஆன்மாவும் கடவுளுமே நித்தியமென்றும், மண்பெண் பொன் முதலி உலகபோகங்கள் யாவுமே அநித்திய மென்றும் யாவர்க்கும் வாசாஞானமாய்த் தெரியும். ஆயினும் மாயையின் வயப்பட்டிருப்பதால் அவற்றில் ஆசைவிடாது. மாயையொழிந்து ஆன்மாவை யறிந்த பின்பே இவையாவும் அநித்தியம், சடம் என்று இயற்கையாய்த்தோன்றும். பிறகு எதிலும் ஆசை செல்லாது. அப்போதுதான் மெய்யான தன்மை விளங்கிப் பொய்யான தன்மை யொழிந்ததாகும்.

"நிராசை வராவிட்டால் பொய்யான தன்மை யொழியவில்லை. நிராசைவந்தால் அது வொழிந்து மெய்யான தன்மையை யுணர்ந்தவராவோம். அப்போதுதான் நாம் ஆண்டவனது அடிமையாவோம்" என்பது விளங்கவே "ஐயாவே, மன்னு நிராசையின்னும் வரவில்லையே, நான் உன் அடிமை என்ற நிலையை யெப்படி அடைவேன்" என்றார்.

3. கருத்து—அஞ்ஞானமே மேலிட்டிருக்கும் என்னை அறிவு உள்ளவன் என்று கூறுவது வீணே. ஆனால் பேரறிவினனாகிய நீ என்னுள்ளிருந்து அறிவிக்க நான் அறியுந்தன்மை யுடையவனாக விருப்பதால் எனக்கு அறிவு என்று பெயரிடப்பட்டது போலும்.

ஆனந்தபோதினி

துந்துபிஹூ தைமீ கஉ

வர்த்தகம்.

உலகில் மனிதருடைய வாழ்க்கைக்கு இன்றி யமையாத தொழில்களில் வர்த்தகம் இரண்டாவதாகும். விவசாயம் முதலாவது. வர்த்தகத்திற்கு அனுசரணையானது கைத்தொழில். எந்த நாட்டிலும் இந்த மூன்றும் எந்த விதத்திலேனும் இருந்தேதீரும். செல்வம் மலிந்துள்ள நாடுகளெல்லாம் வர்த்தகம், கைத்தொழில் இவற்றாலேயே செல்வத்தை யடைந் திருக்கின்றன. விவசாயம் இந்த இரண்டிற்கும் ஆதாரம்; அது பிராணாதாரமானது.

வர்த்தகம் என்றால் ஒன்றைக் கொடுத்து வேறொரு பொருளைப்பெறல். ஆதியில் தானியங்களைக் கொடுத்தே எதையும் வாங்கிக்கொண் டிருந்தார்கள். இப்போதும் கீரைதினுசுகள், கரிவேப்பிலை, சிறுபழங்கள் முதலியவற்றிற்குத் தானியத்தைக்கொடுத்தே வாங்குவதைச் சாதாரணமாய்க்காணலாம். பிறகு வரவரப்பொதுவாய் வழங்கக் கூடிய உலோக நாணயங்களை யேற்படுத்திக் கொண்டார்கள். ஆப்ரிகாவின் உள் நாட்டில் சுதேச ஜாதியாருக்குள் இப்போதும் பித்தளைக்கம்பி, பலநிறமணிகள், சீலை இவை நாணயத்திற்குப் பதிலாகச் செலாவணியாகின்றன. நிஜாம் இராஜ்ஜியத்தில் இப்போதும் பலகறை யென்ற கவடி நாணயமாகச் செலாவணி யாவதைக் காணலாம். நம் நாட்டிலும் பூர்வீகத்தில் அது செலாவணி யாகிவந்தது. இன்னும் "என்னிடம் ஒரு கவடிக்காசு கூட இல்லை" என்று ஜனங்கள் கூறுவது வழக்கமாக விருக்கிறது.

நம்நாடு எப்போதும் விவசாயத்தில் விசேஷித்தது. பூர்வீகத்தில் வர்த்தகத்திலும் கைத்தொழிலிலும் சிறப்புவாய்ந் திருந்தது. தென்னாட்டில் துறைமுக நகரங்களி லிருந்தவர்களில் அனேகர் தீபாந்தரங்களுக்குச் சென்றும், தூரதேசங்களோடும் கப்பல் வர்த்தகம் செய்துகொண் டிருந்தார்கள். கப்பற்கட்டும் தொழிலும் நம் நாட்டில் நடந்துவந்தது. மகம்மதியர் அரசாண்ட காலத்தில் கூட நூற்றுக் கணக்கான சண்டைக் கப்பல்கள் இங்கு இருந்திருக்கின்றன. அந்தோ! அன்னிய நாட்டார்வந்து இதைக் கைப்பற்றியபின் இத்தகையகைத்தொழில் வர்த்தகம் யாவும் அழிக்கப்பட்டன. நம் நாட்டார் புது மாயையில் சிக்கி மயங்கிப்போய் பின்னால் கேடுவரு மென்பதை யுணராமல் தங்கள் க்ஷேமத்தின் அழிவிற்கு இணங்கி இடம்கொடுத்து விட்டார்கள். போனது போயிற்று. இனி எவ்வாறு நடந்து கொண்டால் சீர் பெறலாம் என்பதைச் சிந்தித்து முதலாவதாக நம்மிடமுள்ள குற்றங்குறைகளை நீக்கிக்கொள்ள முயன்றால் ஆண்டவன் அருளால் க்ஷேமமுறலாம் என்பது திண்ணம்.

1. முதலாவதாக விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் இத்துறைகளில் ஜீவித்தல் அகௌரவ மென்றும் சேவகா விர்த்தியே கௌரவத் தொழிலென்றும் நம்மவர் எண்ணி யிருக்கிறார்கள். இதுபெரிய மூடத்தனமான தப்பெண்ணம். இதை யொழித்துச் சேவகாவிர்த்தியே அதமமான அடிமைத் தொழிலென்றும் மற்ற

மூன்றுமே சுதந்தரமுடைய கௌரவத் தொழில்களென்றும் செல்வந்தரும் தொழில்களென்றும் உணரவேண்டும்.

2. மேற் கூறப்பட்ட மூன்று தொழில்களையும் செய்யும் நம் நாட்டார் அத்தொழில்களைச் செய்வதற்குக் கல்வி அவசியமில்லையென்று கருதுகிறார்கள். இதுவும் பெரியதோர் கேடு விளைவிக்கும் தவறான அபிப்பிராயமே. அத்தொழில்களைச் செய்வோர் கல்வி கற்காததால் அத்தொழில்கள் சீர்திருத்த மின்றி, நவீன முறைகள் கண்டு பிடிக்கப்பட்டு விர்த்தி யடையாமல் தலைமுறை தலைமுறையாக ஒரே நிலையில் இருக்கின்றன.

மேல் நாட்டார் அததற்கு அவசியமான சாத்திரங்களைக் கற்றுத்தொழில் செய்வதால் அவர்கள் தொழில் மேம்பாடடைந்து, அவர்கள் மிக்க செல்வம் பெறுகிறார்கள். கல்வி புத்திக்குக் கூர்மை யளிக்கிறது. புத்தி தீட்சண்ணியம் பெற்று ஒருதொழிலை முறைப்படி போதிக்கும் சாத்திரத்தைக் கற்றவன் அத்தொழிலைத் திறமையோடு செய்து நல்லபொருள் சம்பாதிப்பான். புத்திதீக்ஷணிய மில்லாதவனுக்கு யுக்தியோசனைகள் உதிக்கா. ஆதலின் நம் நாட்டு வர்த்தகர்கள் தமமககளுக்குப் போதுமானவரை சக்திக்கேற்ற அளவு கல்விகற்பித்துப் பிறகு வர்த்தகத்திற்கு வேண்டிய கல்வியையும் கற்பிக்க வேண்டும்.

3. நம்மவர் பலர் ஒன்று சேர்ந்து திரண்ட முதல் வைத்து வியாபாரம் செய்வதில்லை. ஏனெனில், அப்படி வைத்தால், தக்கபடி கணக்குவைக்கத் தெரியாது. அதனால் ஒருவரை யொருவர் நம்புவதில்லை. ஒருவன் இரண்டு மூன்று சிறுவர்களை வைத்துக் கொண்டு வர்த்தகம் செய்தால் தானே காலையில் வந்து கடை திறக்கிறான்; மாலை பூட்டிக்கொண்டு போகிறான்; இடையில் ஒவ்வொரு சரக்கையும் கொண்ட விலைக்கு அதிகமாகவே விற்கிறோமென்று தெரிகிறது. இவ்வளவே இவர்கள் அறிந்தது. மேல்நாட்டார் நூற்றுக்கணக்கான பங்காளிகள்சேர்ந்து இலக்ஷக்கணக்கான பணம் முதல்வைத்துப் பலஊர்களில் கடைகள்வைத்து வர்த்தகம் நடத்துகிறார்கள். பங்காளிகளில் ஒருவர் இருவர் உழைப்பாளிகளாகவும் சம்பளம்பெற்று ஆங்காங்கு வேலையைப் பார்க்கிறார்கள். சட்டதிட்டத்தோடு கணக்குகளைவைத்து வேலைகளை யொழுங்குப்படி நடத்துவதால் எல்லாம் சீராக நடக்கிறது. வருடா வருடம் கணக்குப் பரிசோதகருக்கு 500, 600 கொடுத்துக் கணக்குகளைப்

பரிசோதித்து, தப்பாமல் எல்லா பங்காளிகளுக்கும் இலாபத்தைப் பகிர்ந்து அனுப்பி விடுகிறார்கள்.

அவர்கள் மட்டும் எப்படி அவ்வாறு செய்கிறார்கள்? அவர்களுக்கிருக்கும் புத்தி நம்மவர்க் கில்லையோ? இருக்கிறது. ஆனால் கல்வி இல்லை. அதனால் தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறார்கள்.

மேல்நாட்டில் இயற்கை யுற்பத்தி மிகக்குறைவு. அப்படியிருந்தும் அவர்கள் விர்த்தியடைகிறார்கள். நம்நாட்டில் இயற்கை வளமும் அதனால் உற்பத்தியும் ஏராளமாக விருந்தும் கல்வியில்லாததால் நாம் இந்த நிலையிலிருக்கிறோம். காரணம் கல்வியின்மையே.

4. இலாபம்:—நம்மவர்களுக்கு ஆதிமுதல் அளவில் குறைக்கலாகா தென்றும், ஒரு அளவான இலாபமேவைத்து விற்கவேண்டு மென்றும் விதியுண்டு. மேல்நாட்டார் இலாபத்திற்கு ஒரு விதியில்லை. ஒரேயொரு திருட்டாந்தமட்டும் கூறிவிடுகிறோம். இச்சென்னையிலுள்ள ஒரு பிரபலவர்த்தக ஸ்தலத்தில் அமெரிகாவிலிருந்து ஒருவித சிறு கைத்துப்பாக்கிகள். 6 சிறு தோட்டாக்கள் போட்டுச் சுடக்கூடியவைகள் வந்தன. அதன்விலை, அதற்காக நேரிட்டசெலவு, சுங்கத்தோடு கூடியயாவும் சேர்ந்து—ஒரு துப்பாக்கி ரூ. 7—2—0 ஆயிற்று. அங்குள்ள முக்கிய காரியஸ்தர் அதற்கு எவ்வளவு இலாபம் சேர்க்கவேண்டும் என்று கூறவேண்டும். அவர்தம் காரியஸ்தரை யழைத்து "இம்மாதிரித்துப்பாக்கி இந்நகரில் வேறு யாராருக்கு வந்திருக்கிறது. அவர்கள் என்னவிலைக்கு விற்கிறார்கள் என்பதை யறிந்துவாரும்" என்றுகட்டளையிட்டார். காரியஸ்தர் போய்ப்பார்த்து வந்து "இங்கு ஒருவரும் இத்தகைய துப்பாக்கிகளை வரவழைக்கவில்லை" என்று கூறினர். உடனே முக்கிய காரியஸ்தர் "சரி, 15 ரூபாய் விலைபோடு" என்றார்.

மேல்நாட்டார் இலாபம் சம்பாதிக்கும் மாதிரி இவ்வாறே. நம்மவரோ மநுநீதிப்படி நடக்கவேண்டும் என்று மட்டும் கருதுகிறார்களே யன்றி மற்றவிஷயங்களைக் கவனிப்பதில்லை.

5. இன்னொரு விஷயம் நமது வர்த்தகர்களுக்கு அவமதிப்பையும், நம்பக மின்மையையும், ஈனத்தையும் உண்டாக்குகிறது. அது எதுவெனில், மேல்நாட்டாரை அவர்கள் வெளிவிஷயங்களில் மட்டும் பின் பற்றுதலேயாகும். இது மிக்க கௌரவம் என்று நம்மவர் எண்ணிக் கொள்கிறார்கள். ஆனால் மேல்நாட்டார்

வர்த்தகம செய்வதிலுள்ள ஒழுங்கையும், நல்ல முறைகளேயும் பின்பற்றுவதில்லே. முதலாவது பெயர் வைப்பதில் நம்மவர் மேல் நாட்டு ரீதியாய் வைக்கக்கருதி நமக்குள்ள நல்ல பெயர்களே யெல்லாம் ஆபாசப்படுத்தி அறிவாளிகள் நகைக்கும் வண்ணம் செய்கிருர்கள். சிலர் மேல்நாட்டுப் பெயர்களேயே வைத்துக்கொள்கிருர்கள். யாவரும் தமது கடை மேல்நாட்டார் கடையென்று கருதவேண்டு மென்பது இவர்கள் எண்ணம். இது மோச எண்ணமும் இழிவான நடக்கையுமே யல்லவோ! நம்முன்னேர் பெயர்கள் இவர்களுக்கு அகௌரவமாய்த் தோன்றுகின்றன போலும். அந்தோ! நம்நாட்டார் இவ்வாறு தாய் நாட்டிலும் தாய்ப்பாஷையிலும் அபிமானங் குன்றி நம்நாட்டு ஆசார ஒழுக்கங்களே அவமதித்து நடப்பதாலன்ருே நம் தாய்நாடு இத்தகைய சீர்கேடான நிலேமையை யடைந்திருக்க நேர்ந்தது.

1. இவர்கள் கடவுளர் நாமங்களாகிய நல்லபெயர்களே யெல்லாம் சுத்த ஆபாச மொழிகளாக்கிப் பெயர்வைத்துக் கொள்கிருர்கள். இரண்டொரு திருட்டாந்தம் மட்டும் கூறுகிருேம்.

க-லோகநாதம் பிள்ளே அல்லது முதலியார் என்பவர் ஒரு வர்த்தகம் செய்யத் தொடங்கின், "கெ-லோகன் அண்டுகோ" என்று வைத்துக் கொள்கிருர். இவ்வாறே "பா-ஸ்ரீனிவாசன்" என்பதற்கு "பி-யஸ் வாசன் அண்டுகோ" என்றும், "மீ-கந்தசாமி" என்பதற்கும் "யம்-கெ. ஸாமி அண்டுகோ" என்றும் "தி. வெங்கடாசலம்" என்பதற்கு "டி-வி-சலம்" என்றும், "விஸ்வநாதன்" என்பதற்கு "வி-நாதன்" என்றும் வைத்துக் கொள்கிருர்கள்.

சிலர் தமதுகடை அல்லது தாம் பொது நலங்கருதி அமைக்கும் ஒரு சத்திரம், குளம், பொதுச் சாவடி, நகரமண்டபம் முதலிய விடங்களுக்கு நம்நாட்டு முன்னேர், மகான்கள், முதலியவர்க ளெல்லாம் இருக்க அவர்கள் பெயர்களேச் சூட்டாமல் பொருள் சம்பாதித்துக் கொண்டு போக நம் நாட்டில் வந்து கொஞ்சநாள் தங்கிவிட்டுத் திரும்பிச் செல்லும் மேல் நாட்டார் நாமதேயத்தைச் சூட்டுகிருர்கள். இத்தகைய செய்கைகளால் தாங்கள் தேசபக்தியில்லாத மூடரென்றும், சுலபத்தில் அடிமைத் தனத்திற்கு உடன்படும் பேதைமதியினர் என்றும் காட்டிக்கொள்கிருர்களேயன்றி இத்தகையோர் எண்ணுகிறபடி அவர்கள் இவர்களேக் கௌரவப்படுத்தி நன்கு மதிக்கப் போகிறதில்லே.

2. மேல் நாட்டார் பலர் ஒன்று சேர்ந்து வர்த்தகம் செய்வ[illegible] பிரதான ஆசாமியின் பெயரோடு 'கம்பெனி' என்ற வார்[illegible] சேர்ப்பார்கள். சுருக்கத்திற்காக அந்த வார்த்தை[illegible]டெழுத்தை மட்டுமே வரைவதுவழக்கம். அந்த

இரண்டு ஆங்கில எழுத்துகள்மட்டில் கோ. (Co.) என்று உச்சரிக்கும்.

பலபேர் சேராமல் ஒருவன் தன் சகோதரரைமட்டும் சேர்த்துக்கொண்டு வர்த்தகம் செய்யின், தன்பெயரோடு சகோதரர்கள் என்று பொருள்படும் 'பிரதர்ஸ்' என்ற வார்த்தையைச் சேர்ப்பான். ஒருவன் தான்மட்டுமே தனியே வர்த்தகம் செய்வதாயின் பிறகு அது தன் சந்ததிக்குச் சொந்தம் என்று விளங்கத் தன் பெயரின் பக்கத்தில் ஸன்ஸ் (புத்திரர்) என்ற வார்த்தையைச் சேர்ப்பான்.

அந்தோ! நம்மவர்களோ ஒருவனே பரபத்திய மின்றியே ஒரு வர்த்தகம்செய்ய ஆரம்பிக்கும் போதே அண்டு கோ என்று போட்டுக் கொள்கிறது சாதாரணமாய் விட்டது. அறிவாளிகள் நகைப்பார்களே என்று நம்மவர் எள்ளளவும் கருதுவதில்லை. இதுவும் கல்வியில்லாத குறையே.

3 இன்னொரு விஷயம் நம் நாட்டு வர்த்தகத்தில் பூர்வீகத்திலிருந்தே இருந்துகொண் டிருக்கிறது. இதனால் வர்த்தகர்க்கும், பேரம் செய்வோர்க்கும் வீண் சிரமமும், வீண்காலப் போக்கும் நேர்வதோடு வர்த்தகர் வார்த்தையில் நம்பிக்கை யென்பது இல்லாமற் போகிறது. அதுதான் பேரம் செய்வது.

மேல்நாட்டார் ஒவ்வொருபொருளுக்கும் காலத்திற்குத்தக்கபடி இவ்வளவு இலாபம் என்று அசல் விலையோடு சேர்த்து விற்கும்விலை யின்னதென்று ஒரு சீட்டில் எழுதி அப்பொருளிலேயே கட்டி விடுகிறார்கள். வாங்கவருபவர் அதைப் பார்த்ததும் பிரியமிருந்தால் அதை யெடுத்துக் கொண்டு கிரயத்தை யளித்துவிட வேண்டும், இன்றேல் பேசாமல் போகவேண்டியதே. இந்தவழக்கத்தால் அவர்களிடம் ஆயிரம் ரூபாய் பேரங்கூடக் கால் மணி அரை மணிக்குள் சந்தடியின்றி நடந்து முடிந்து விடுகிறது. நம்மவரிடமோ வர்த்தகன் ஒரு விலை கூறினால் வாங்கவருபவன் ஒரு போதும் குறைத்துக் கேட்காமல் உடனே சொன்ன விலையை யளிக்கமாட்டான். வர்த்தகனும் ஒரு ரூபாய் அசல் விலையாயின் எடுத்ததே விலை ரூ 1—2—0 அல்லது 1—4—0 என்று கூறுவான். இரண்டு, இரண்டரை யென்பான். அப்படி யொரேவிலை கூறவெண்ணி ஒரு வர்த்தகன் கரார் விலைக்கே விற்கத் தொடங்கினால், இன்னொருவன் தானும் கரார்கடை என்று விளம்பரப் பலகை மாட்டிவிட்டு, உமக்குமட்டுமே குறைத்துக்கொடுக்கிறேன் என்று ஒவ்வொருவர்க்கும் கூறி இரகசியமாய்ப் பேரம்பேசி விற்பான். இத்தகைய அயோக்கியனால் உண்மையாய் நடப்பவன் கரார் என்பதை விட்டுவிட நேர்கிறது.

நண்பர்களே! இக்குற்றங்களெல்லாம் உள்ளவரையில் நம் நாட்டுவர்த்தகம் ஒருபோதும் முன்னேற்ற மடையாது. இவற்றிற் கெல்லாம் காரணம் வர்த்தகர்க்குக் கல்வி யின்மையே. நம் நாட்டில் 100-ல் 98 வர்த்தகர்க்குக் கல்வியிராது. அவ்வளவாயிருந்தால், சொல்பமாக எழுதப்படிக்க மட்டுமே தெரியும். தொழில் முறைக்கல்வி யடியோடில்லை. இதனுற்றான் அத்தொழிலுக்குக் கௌரவமான மதிப்பின்றி, உண்மையில் கௌரவமான சுயாதீனத்தொழிலை நம் நாட்டார் தாழ்ந்ததாகக்கருதி அடிமைத் தொழிலிலேயே அல்லற்படுகிறார்கள். விரிக்கிற் பெருகுமென வஞ்சி முடிவைக் கூறிவிடுகிறேம்.

இப்போது நம் தாய்நாட்டின் முன் நிலைமையையும் தற்கால நிலைமையையும் உணர்ந்து இனியேனும் முன்னேற்ற மடைய வேண்டுமென்று எங்கும் பெருமுயற்சி நடக்கிறது. இனியேனும் நம் நாட்டார் இதில் கவனம்வைத்துக் குற்றங்களை நீக்கி, வர்த்தகரா யுள்ளோர் தம் மக்களுக்குத் தக்க கல்வியளித்துத் தம்தொழிலிலேயே யவர்களைப் பிரவேசிக்கச் செய்யும் வண்ணம் பிரார்த்திக்கிறேம். ஆண்டவன் அருள்புரிவாராக.

ஓம் தத் ஸத்.

ஜீவவதையும் முகம்மதியரும்.

பொதுவாய் எந்தமதத்திலும், எவ்வகையான மிருகம் அல்லது பட்சிகளைக் கொன்று சாப்பிடலாம் என்று சொல்வது, அம்மதக் கொள்கையில், பாபமல்லவென்ற இருக்குமானுலும், அது தவறேயாகும். ஆடு, கோழி சாப்பிடலாம், அவைகொன்று சாப்பிடுவதற்கே ஏற்பட்டன, மற்றவைகளைத் தெய்வமாய் நினைக்கவேண்டுமென்று சிலர் சொல்வதும் ஜீவகாருண்யமாகாது. சகல ஜீவராசிகளையும் ரட்சிப்பதே ஜீவகாருண்ய மாகும். எவ்வகை மதத்திலும், எந்த ஜீவனையும் கொன்று சாப்பிடும்படி சொல்லி யிருக்கவே யிருக்காது. உதாரணமாய், ஆடுகளை வதைசெய்வதில் ஆரியர்கள் கொன்றால் புண்ணியமென்றும், முகம்மதியர் கொன்றால் பாவமென்றும் வைத்துச் சிலர்பேசுகிறார்கள். முகம்மதியர்கள், பசுக்களைக் கொன்றால் புண்ணிய மென்றும், மற்றவர்கள் செய்வது பாவமென்றும் அபிப்பிராயப் படுகிறார்கள். எப்படியெனில், ஆடுகளை யாகம்செய்வதாயும் மந்திரசக்தியால் அதன் ஜீவனை நல்லபதவி யடையச்செய்து விட்டதாயும், அதைப்பற்றி, தாம் செய்த காரியம் புண்ணியச்செயலென்றும் ஆரியர்கள் நினைக்கிறார்கள். முகம்மதியர்களைக் கேட்டால், ஆரியர்கள் வருஷத்திற் கொருதடவை ஒரு ஆட்டின்

ஜீவனை நல்பதவி யடையச்செய்தார்கள், அவர்களுக்கு இரக்கமில்லை. அநேக கோடி ஜீவராசிகள் உலகிலிருக்கும்போது அவற்றை யெல்லாம் நல்ல பதவி யடையச் செய்ய இவர்களுக்கு மனம்வரவில்லை. நாங்களோ ஏராளமான ஆடுகளையும், பசுக்களையும், மந்திரம் சொல்லிக் கழுத்தில் கத்தியாலறுத்து அவைகளின் ஜீவன்களை நல்லபதவி யடையும் பொருட்டு அனுப்புகிறோம் என்று சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்வது உண்மையா வென்றுபார்ப் போம். யாகம் செய்கிறவர்கள், தாம் கொல்வது புண்ணியம், அன்னியர் கொல்வது பாவமென்கிறார்கள். அப்படியே முகம்மதியர்கள், தாங்கள் கொல்வது புண்ணியம், அன்னியர் கொல்வது பாவமென்று கருதுகிறார் கள். சிலர் கோவிலுக்கு ஆடு, மாடு வெட்டுவது புண்ணியம் சம்பாதிக்க என்கிறார்கள். பலவகையான மதஸ்தர்களில், அவரவர்கள் தாம் செய்வது புண்ணியமென்றும், அன்னியர் செய்வது பாவமென்றும் நினைக்கிறார்களே யொழிய, தாம் செய்யும் துர்க்குணத்தை ஒப்புக்கொண்டு அன்னியர் துர்க் குணத்தை நீக்கப் பெரும்பாலும் முயற்சி எடுக்கிறதில்லை. நிற்க, யாகத்தில் கொல்வது புண்ணிய மென்றால் முகம்மதியர்கள், அதிகம் கொன்று புண் ணியம் செய்கிறோ மென்கிறார்களே. அது சரியாவென்று ஆராய்வோம். "எவ்வகையிலும் எந்த எண்ணத்துடனும் கொல்வது தவறேயாகும்." ஆனால், முகம்மதியர்களின் கொள்கைப்படி அவர்கள் மாமிசம் சாப்பிட லாமா என்ற கொள்கையையும் தற்போது, பசு, ஆடு, கோழி, வகையராக் களைச் சாப்பிடுவது என்னகாரணம் என்பதைப் பற்றியும், இனி விவரிப் போம். இஸ்லாம் என்பதற்குப் பொருள் நன்னடத்தை என்பதாகும். ஒவ் வொருவரும் நன்னடத்தை நடக்கவேண்டிய தவசியம். முகம்மது என்ப வர் காலத்தில், ஜனங்கள் அதிக துர்க்குண முள்ளவர்களாயும், கடினநெஞ்ச முடையவர்களாயு மிருந்துவந் திருக்கிறார்கள். அப்போது, ஜனங்கள், தாம் ஜீவிக்கவேண்டியதுதான் முக்கியம், மற்ற ஜீவராசிகள் ஜீவிக்கவேண்டிய தவசியமில்லையென் றெண்ணித்தமக்கு எதிர்ப்பட்டமிருகம், பறவை இவை களை யெல்லாம் கொன்று சாப்பிடுவதைப் பழக்கத்தில் வைத்துவந்தார்கள். இவ்வித அடாத செயல்களைக் கண்டு, நமது நபிநாயகம் என்னும் முகம் மது அவர்கள், அவர்களை நல் நடத்தைக்குக் கொண்டுவர வேண்டுமென்று அதிக கவலைப்பட்டு, பலவகையான போதனைகள் செய்து, நன்னடத்தை, என்னும் இஸ்லாம் மார்க்கத்தில் அவர்களைச் சேரச்செய்தார். பிறகு, மனி தன் எல்லா ஜீவராசிகளிலும் மேலானவன். சகல ஜீவராசிகளையும் காப் பாற்றுவது மனிதனுடைய முதல் கடைமை யென்றும், மனிதனுக்கு முக் கியம் ஜீவகாருண்யம் வேண்டு மென்றுஞ் சொல்லி வதைத்துச் சாப்பிடு வதை நிறுத்திவிடும்படி பலவாறாகப் போதித்தார். நிற்க அன்பர்களே! இங்கு கவனிக்கவேண்டும் .நாகரீகம் என்று நினைக்கும், இந்தக் காலத்தில், அநேக சைவமதஸ்தர்கள் பலபோதனை செய்து வரும்பொழுதே "வதை

த்துச் சாப்பிடுவது கூடாது" என்றால் தாம் கொல்வது புண்ணியமென்று அநேகர் தர்க்கிப்பதைப் பார்க்கிறோமே. இப்படியிருக்கச் சகல ஜனங்களும் துஷ்டர்களா யிருந்த அந்தக்காலத்தில், எப்படி அவர்களுக்குத் தாம் செய்கிற காரியம் பாவமென்று தோன்றும்? ஆகையால் அவர்கள் அவ்வாறு போதித்த முகம்மது அவர்களையே கொன்றுவிட யத்தனித்ததுடன், அவர்கள்சொன்ன இஸ்லாம் மார்க்கத்தையும் தள்ளிவிட யத்தனித்தார்கள்.

உடனே முகம்மது என்பவர் ஆலோசித்து, "ஜனங்களுக் கிருக்கும் குணத்திற்குத் தகுந்த புத்தி படிப்படியாய்ச் சொல்ல வேண்டும், தந்திரமாய் வழிக்குக் கொண்டுவர வேண்டும், இப்படித் தந்திரமாய்ப் பேசாமல் அல்லவா, ஜனங்கள் அதிக துஷ்டத்தனமா யில்லாத காலத்திலும், நமக்கு முன் உண்மையுரைக்கவந்த, கிறிஸ்துவைச் சிலுவையில் துஷ்டர்கள் அறைந்து விட்டார்கள். ஆனதினால் நாம் ஜாக்கிரதையா யிருந்து இவர்களை எப்படியும் நன்னடத்தையில் நடக்கச்செய்ய வேண்டும்" என்ற ஒரே எண்ணத்துடன் பின்வருமாறு தீர்மானிக்கலானார். அதாவது, நாம் இவர்களை உடனே மாமிசத்தைத்தள்ளும்படி போதித்தால் அது இவர்களின் செவியில் ஏறாது; கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைக்கச் செய்ய வேண்டும். அப்படிக் குறைப்பதில் அவர்களுக்கு சாத்வீகம் உண்டாக வேண்டும் என்றெண்ணி, பொதுவாய், வைத்திய சாஸ்திரப் பிரகாரம், ஒரு ஆட்டின், காலினுடைய மாமிசத்தைப் புசிக்கக்காலுக்கு வலுவென்றும், இடுப்பு மாமிசம் இடுப்புக்கு வலுவென்றும், மூளையைச் சாப்பிட மூளைக்கு வலுவென்றும், இப்படி இன்னின்ன உறுப்பு சாப்பிட, அந்தந்த உறுப்புக்கு வலுவென்றும் சொல்லப்பட் டிருக்கிறதைப் போலவே, மிருகங்களில், துஷ்ட மிருகங்களைச் சாப்பிட துஷ்டகுணம் உண்டாகு மென்றும், சாந்தமான மிருகத்தைப் புசிக்க, சாந்தகுண முண்டாகு மென்றும் எண்ணி, அப்படிச் சிலகாலம் சாந்தமான மிருகத்தைச் சாப்பிட்டு வந்தால், அதிக துஷ்டத்தனம் விட்டுச் சற்றுபொறுமைக்குணம் உண்டானபிறகு, பின்னும் அவர்களுக்கு நற்போதனைகள் சொல்லி, "எந்த ஜீவனையும் கொல்லாமல் செய்துவிடலாம்," என்று தீர்மானித்து, நல்லகுணமும், சாந்தமுமுள்ள மிருகங்களான, பசு, ஆடு, மான், அதாவது, பிளவுபட்ட குளம்போடு அசைபோடக் கூடியதெல்லாம் சாந்த மிருகமாதலால், "காலில் பிளவுபட்ட குளம்புள்ள துடன், அசை போடக்கூடியது, ஹலால்," அதாவது சாப்பிடக் கூடியது என்றும், காலில் நாய், பூனைபோல் நகமுள்ளது துஷ்டத்தன முள்ளதுடன், அது வேறு ஜீவனை வேட்டையாடிப் புசிப்பதால், அதனிடத்தில் அதிக துர்க்குணமுண்டாகுமென்று, "காலில் நகமுள்ள மிருகம் ஹறாம்," அதாவது சாப்பிடக் கூடாதது என்றும், பட்சிகளில், தான் சாப்பிடும் ஆகாரத்தை காலால் பிடித்துக்கொண்டு வாயால் கொத்திச் சாப்பிடுவது துஷ்டத்தன முள்ளது, அதாவது, கழுகு, பருந்துபோன்ற பல பட்சிகள் ஹறாம் என்றும், காலால்

பிடிக்காமல் தான் சாப்பிடும் ஆகாரத்தை மூக்கால் கொத்திச் சாப்பிடும்படியான கோழி, குயில், புரு, போன்றவை அதிக துஷ்டத்தனமில்லாமலிருக்குமாதலால், காலால் பிடிக்காமல், வாயால் கொத்திச் சாப்பிடும் பக்ஷிகள் ஹலால் என்றும், இப்படி துஷ்டத்தனத்தைக் குறைக்க ஒருசட்டம் ஏற்படுத்தி, பலரைக் கூப்பிட்டு, மேற்படி போதனைகளைப் போதித்தார். அதற்குப்பலர் இணங்கி, இதை ஒருவகையில் கேட்போமென்று தீர்மானித்து, இஸ்லாம் மார்க்கத்தில் புகுந்தனர். முக்கியம், மிருகங்களில் அதிக சாத்வீககுண முடையது பசுவாதலால், பசுவை அதிகம் சாப்பிடும்படி செய்து வந்திருக்கிறார்கள். சகோதரர்களே! சற்று கவனிக்க வேண்டும். பசுவைக் கொல்வது புண்ணியமென்ற அபிப்பிராயத்தில் சொன்னதல்ல. கொலைசெய்வதில், பசுவைக் கொன்றாலும் சரி, ஆடு, நாய், நரிகளை வதைத்தாலும் சரி, எல்லாம் வதையே. இதெல்லாம் ஜீவகாருண்யத்திற்கு நேர் விரோதமே யாகும். பசுவைக் கொன்றாலும் ஆட்டைக் கொன்றாலும் அக்கொலைக்கு நாம் ஆளாகவேண்டியதுதான். நமக்குட்பட்டிருக்கும் எளிய ஜந்துக்களை நாம் கொன்று சாப்பிட்டால், "எளியாரை வலியார் வாட்டினால், வலியாரை தெய்வம்வாட்டும்." என்பதுபோல், நம்மைத் தெய்வம் வாட்டாமல் விடாது; இது நிச்சயம். இதுநிற்க, நமது முகம்மது, என்பவர் மேற்கண்ட துஷ்டமிருகம் சாப்பிடக்கூடாது என்று போதித்து, சாந்த மிருகம் சாப்பிடலாமென்று சொன்னார். இதைப் பலர் ஒப்புக்கொண்டு, அப்படியே நடந்துவந்தார்கள். பிறகு அதைத்திருத்துவதற்குமுன், அவர் பரலோகமடைந்துவிட்டார். ஆதலின அதுவே அநுஷ்டானத்தில் நின்றுவிட்டது. தற்போது, மிருகவதை கூடாது என்றால், நபிநாயகம் தன் வாக்கால் இன்னின்னமிருகம் ஹலால், அதாவது, சாப்பிடலாமென்று சொல்லியிருக்கிறார். அவர்வாக்கைத் தவறுவது கூடாது என்று, ஒரேபிடிவாதமாய்ச் சொல்லி, வதைப்பதை நிறுத்திவிட இஸ்லாம் மதாசாரியார் ஒருவரும் முயற்சி செய்வதில்லை. முகம்மதியர்கள் மாமிசம் புசிப்பதற்கு இதுதான் காரணம். இது நிற்க, நான் முகம்மதிய குலத்தில் பிறந்தவன். இஸ்லாம் என்னும், மார்க்கசட்டதிட்டங்களை, அதிகநான் ஆராய்ச்சி செயததில், நடையில் பலமாறுதலிருப்பினும், இஸ்லாமிய சட்டங்களும், நற்போதனைகளும், பலமதத்திலுள்ள, நன்னடத்தைகளைப் பலசௌகரியங்களை உத்தேசித்து,பொறுக்கிச்சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று விளங்கியது. ஆனால், நல்லமரத்தில் போரைவிழுந்ததுபோல, இவ்வளவு சத்தியமான இஸ்லாம் மதம் என்னும் மரத்தில், போரை விழுந்ததற்கொப்ப, கொலைபாதகத தொழி லிருக்கிறது. ஆதியில் சொன்னவர் எதறகாக என்று ஆராய்ச்சிசெய்து, அதற்குப் பல போதகர்கள் கிளம்பி பிரசுரஞ்செய்து எவ்வகை மிருகவதையுங் கூடாது என்று தடுக்கமுயற்சி செடுப்பாராகில், நம்மதத்தின் கௌரவம்,நல் நடத்தை ஜீவகாருண்ய சிரத்தை இவைகளுக்கு அளவிட முடியாது. இஸ்லாம் மார்க்

கத்தில், மாமிசம் சாப்பிடத்தான் வேண்டும், அது புண்ணியச்செயலென்று
உண்மையா யிருக்குமாகில் அந்தமார்க்கமேதவறு, என்று நான் எண்ணி,
பலநாள் ஆராய்ச்சியின்பேரிலும், என்குருவின் போதனையாலும், உண்மை
யறிந்து, மேற்கண்ட விஷயங்களைப்பலரும் அறியும்பொருட்டு இதைவெளி
யாக்கி யிருக்கிறேன். பின்னும், ஒரு விபசாரியான பெண்ணினுடைய நட
த்தையைச் சொந்தப்புருஷன் அறிந்து கண்டித்தால், அதற்கு அவள்,
"ஐயோ, நான் உண்மையாய்க் கற்புடையவள், என்னைப்பார்த்து அவதூறு
சொல்கின்றாயே, உனக்குச் சாபமிடுகிறேன், நீ நல்லபதவி யடையமாட்
டாய்" என்று சொல்லுவாள். அது அவளுடைய பாசாங்காகும். அதைப்
போல், பல மதாசாரியர்கள் "நான்சொல்வதை மறுத்துச்சொல்பவர், எழு
ழுதியதை நம்பாதவர் மதத்தைவிட்டு விலகினவராவர்" என்று சொன்ன
விஷயம், ஆதியில் எதைப்பற்றிச் சொன்னாரென்று, அறியாமல் சிலர்சொல்
லுவார்கள். ஆனால் அறிஞர் எவரும் அப்படிச் சொல்லமாட்டார்க ளென்
னும் பூரண நம்பிக்கையோடு இதை எழுதியிருக்கிறேன். மேலும் ஒரு மகம்
மதியன், ஹிந்துமதத்தினுடைய கொள்கையையும், தன் மதக்கொள்கையையு
மறியாமல் தன்மதம் மேலென்றும், ஒருஹிந்து, இஸ்லாமிய கொள்கையை
யும் ரகசியமு மறியாமல் தன்மதம் மேலென்றும் சொல்வது வழக்கமாயிருக்
கிறது. ஒன்றோடொன்று ஒத்துப்பார்த்து, நடக்க ஆரம்பித்தால், மதப்
போராட்டம் ஹிந்து முஸ்லீமுக்குள் நேராமல், அவரவர்களிட மிருக்கும்
துர்க்குணத்தை நீக்கி காலதேச வர்த்தமானத்துக்குத் தக்கவாறு நீதிவழு
வாமலும், ஜீவகாருண்யமாகவும் நடக்கலாம். அவரவர்கள் மனம்போனவாறு
காரியம் செய்து விட்டு, சில முகம்மதியர்கள் தாங்கள் நபிநாயகம்சொல்லிய
படி நடக்கிறோமென்கிறார்கள். ஹிந்துக்கள் கண்ணப்பநாயனார் மாமிச
த்தை பூஜைசெய்து மோட்சமடைய வில்லையா? அப்படி நாங்களும்மோட்ச
மடைவோமென்று பலர் கிடா, ஆடுவெட்டி பூஜை செய்கிறார்கள்.
இன்னும், தயாபக்தரா யிருந்து, தருமஞ்செய்யாமல் மோட்சமடைய வில்
லையா? அப்படி நாமும் தருமஞ்செய்யாம லிருக்கலாமென்று, அவரவர்க
ளுக்கு வேண்டிய அததாட்சி சொல்லித் தாம் செய்வதை விடாமல செயது
வருகிறார்கள். ஆனால, ஒவ்வொரு விஷயத்திற்கும், வெளிப்படையான
சொலலுக்கு, இரகசியம் வேறு இல்லாம லிருக்காது. அதை ஆராய்வதே
நம் கடமையாகும். அப்படி ஆராயாமல், நம்மனம்போன போக்கெலலாம,
புண்ணியமென்று சொலவது புண்ணியமாகாது.

குறிப்பு:—ஒவ்வொரு ஹிந்து முஸ்லீம சகோதரர்களும், மிருகவதை
யை நீக்கி, முனிசிபாலிடிகளிலும, தாலூகா, ஜில்லா போர்டுகளிலும, பல
தீர்மானங்கள் கொண்டு வருவதுடன், பல அரிய பிரசங்கங்களும் செய்து
மேற்படி வதையை நீக்க முயற்சி யெடுப்பார்களானால், அதுவே நம தாய்
நாட்டிற்குப் பெரும் பாக்கியமென் றெண்ணுகிறேன்.

ஹக்கீம் ம. அ. ஷம்சுத்தீன் ஸாஹிபு,
தமிழ் சித்தவைத்தியம், பெரிய தைக்கால் தெரு, மாயவரம்.

குறிப்பு:—நண்பர்கள் இந்த வியாசத்தை நன்கு கவனிக்கவேண்டுகிறோம். சாதாரணமாக மகம்மதிய மதம் ஜீவகாருண்யமில்லாத மதம் என்றும் கொடுமையான தென்றுமே மற்றையர் கருதுகிறார்கள். ஆனால் உண்மை யப்படியில்லை. மகம்மது என்ற நபிநாயகம் அவர்களின் வாக்கை வாசித்தோர் அவ்வுண்மையை யறிவார்கள். அவர் ஆத்மஞானத்தைப் போதித்தவராகிய கருணைசொரூபி யெனலாம். அவர்வாக்கும் நடக்கையும் ஒத்திருக்கும். தம்மைக்கொல்ல வரும் எதிரிக்கும் உதவிசெய்வோர். ஒருகாலத்தில் தாம் தமது ஆட்களில் ஐந்தாறுபெயர்களோடு போய்க்கொண் டிருக்கையில் எதிரிகள் இவரைப் பிடித்துக் கொல்லவேண்டு மென்று தேடிக்கொண்டு வருகிறார்கள். அவருடைய நண்பர்கள் "எதிரிகள் அதிகம்பேர் இருப்பதால் நாம் ஓடிவிடுவோம்" என்றார்கள். நபிநாயகம் அதற்குச் சம்மதிக்காமல் தேடிவருவோரைச் சந்தித்து "நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டார். அவர்கள் இவரை எப்போதும் பார்த்ததில்லை. ஆகையால் மஹம்மது என்பவனைத் தேடுகிறோம் என்றார்கள். அவர் "நான்றான் நீங்கள் தேடும் மஹம்மது என்பவன். என்னை யென்ன செய்யவேண்டுமென்று உங்களுக்குப் பிரியமோ அப்படிச் செய்துகொள்ளுங்கள்" என்றார். அத்தகைய உத்தமர்க்கு இடையூறு செய்ய யாருக்கு மனம்வரும்? உடனே அவர்கள் அவர் அடியார்களாய் விட்டார்கள். அத்தகைய மகான் குரூரச்செயல்களைச் செய்யப் போதிப்பாரோ.

கொலையை யங்கீகரிப்பது கடவுளை யறிய வழிகாட்டும் மதமாகாது. மேலே நமது நண்பர் கூறியபடி அக்காலத்தி லிருந்த ஜனங்களின் நிலைமையை யனுசரித்தே மதபோதகர்கள் எதையும் போதித்திருக்கிறார்கள். மாமிசத்தையே முக்கிய ஆகாரமாய்க்கொண் டிருந்தவர்களை யடியோடு விடச்சொன்னால் விடுவது கஷ்டம். அதோடு அவருடைய நல்லபோதனைகளையும் ஏற்றுக்கொண் டிருக்கமாட்டார்கள். ஆகையால் ஆண்டவனுக்குப் பிரீதிசெய்தாவது கொன்று தின்னுங்கள் என்று புத்தி புகட்டினார்.

அந்தோ! ஜீவகாருண்யத்தை அஸ்திவாரமாக வுடைய நம்ஹிந்து மதத்திலுள்ளோரில் பலர் இன்னும் காடன், மாடன், காளி, காட்டேறி என்ற தெய்வங்களின் பெயரால் ஆடு கோழிகளைப் பதைக்கப்பதைக்கக் கொலை செய்கிறார்கள். பசுவை வைத்துக்கொண்டு அது பால்கொடுக்குமட்டும் அதற்கு ஆகாரமளித்து, பிறகு அது கிழத்தனமடைகிறது என்று தெரிந்ததும கசாப்புக்காரனிடம் மனமறிந்து விற்கும் சண்டாளர்கள் இச்சென்னையில் அநேகரிருக்கிறார்கள். அந்தோ! இக்கொலைபாதக பரமசண்டாளர்களுக்கு ஆண்டவன் எத்தகைய நரகதண்டனை யளிப்பானோ, இவர்கள் குலங்குட்டிச் சுவராகி இவர்கள் எத்தனை ஜென்மங்கள் ஆடுமாடாய்ப்பிறந்து கொல்லப் படுவார்களோ அது ஆண்டவனுக்கே தெரியும்.

நமது நண்பரின் சிறந்த நோக்கமும் ஆழ்ந்த அறிவும் நிறைந்த போதனைகளை அறிவாளிகளாகிய மற்ற மஹம்மதியரும் ஏற்றுக் கொள்வார்களென்றே நம்புகிறோம்.

பத்திரிகாசிரியர்.

கம்பராமாயண நீதிச் செய்யுள்.

(210-ம் பக்கத்தொடர்ச்சி)

6. * வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லால்
எள்ளுவ வென்சில இன்னுயி ரேனும்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால் (வேள்விப்படலம்-29)

7. மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கள் மாயா
ஏந்திய கைகொ டிரந்தவ ரெந்தாய்
வீய்ந்தவ ரென்பவர் வீய்ந்தவ ரேனும்
ஈந்தவ ரல்ல திருந்தவர் யாரே. (ஷை 30)

இராமலக்குவரை வேள்விக் கழைத்தேகும் நெறியில், விசுவாமித்திரர் அவர்கட்குப் பல வரலாறுகளைக் கூறுகையில், திருமாலின் வாமனாவதார விருத்தாந்தத்தைக் கழறும் சந்தர்ப்பத்தில் உள்ளவை இச்செய்புட்கள். (இ-ள்.) 'திருமாலே உன்னையடக்க இவ்வாறு வந்தனாராகலின் நீயவர் கேட்கும் பொருளைத் தானஞ்செய்யற்க' வெனத்தடுத்த தன்னாசிரியாகிய வெள்ளி யென்னப்படும் சுக்கிரரை நோக்கி மகாபலி கூறுவான், (6) 'ஐய! நீ வெள்ளி யென்னும் பெயருடையவ னாகலின், இங்ஙனஞ் சொற்றாய். பெரியோர் தம்மாட்டுவந்து யாசிப்போர் கேட்கும் பொருள் யாதாயினும் கொடுப்பார்களே யன்றி, இவை கொடுக்கத் தகாதவையென விலக்கும் பொருள்களு முண்டோ? இல்லையே. தன் னின்னுயிரையே யாயினும் பிறர்மாட்டு யாசித்துப் பெறல் தீது; தன்னுயிரையே யாயினும் இரப்போர்க்கீவது மிக்க இன்பந்தருவதாம். மேலும் (7) சுவாமி! இவ்வுலகத்தில் இரத்தலி னிறத்தலே மேலெனக்கருதி உயிர்விடாது யாசிப்போரே இறந்தோ ராவரன்றி, உண்மையில் இறந்தோர் இறந்தோராகார். தானதருமங்களைச் செய்தோர் மாண்டாலும் வாஸ்தவத்தில் அவர்கள் மாண்டோரல்லர்; உயிரோடுள்ளோரே யாவார். ஆகையால் யான் கொடுத்தே தீருவேன்" என்றான். என்பதாம்.

இவற்றால் சற்பாத்திரமா யுள்ளோர்க்குத் தம்மாலியல்வதை யில்லையென்னாது தருமம் செய்யவேண்டும். 'தருமமே தலைகாக்கும்.' 'பொன்றுங்கால் பொன்றாத்துணையாவது இஃதே,' 'தன்னொடு செல்வது வேண்டின் அறஞ் செய்யவேண்டும்' 'தருமத்துக்குத் தாழ்ச்சியில்லை,' 'ஈயார்தேட்டைத்தீயார் கொள்வர்.' பூதவுடம் பழியினும் புகழுடம் பழியாதாகலின் தருமவான்கள் இறப்பினும் இருப்போரே யாவர். என, ஈதலினேற்றமும், என்னவறுமை யடைந்தாலும் பட்டினிகிடந்தாலும் சாதலேயன்றி, பல்லெ

* வெள்ளியை என்பது வெள்ளியெனும் பெயருடையை எனவும், வெள்ளறிவு அதாவது அறியாமையை யுடையவன் என்றும் இருபொருள்படும்.

லாந்தெரியக் காட்டி, துன்பங்களை யெல்லாம் முகத்திற் கூட்டி, சொல்லெலாஞ் சொல்லி நாட்டி, துணைக்கரம் விரித்து நீட்டி, இவ்வெலாஞ் சென்று 'அம்மா! அய்யா! எனக்கீ' யென்றைய மேற்றல், மறுமைக்கண் தனக்குரிய தானம் துடைத்து, தருமத்தை வேர்பறித்து, மானந் துடைப்பதோர் வாளாகுமாதலின், இரத்தலாகாதென, ஏற்பதின் தாழ்வும் நன்கு விளங்குதல் காண்க. 'நல்லாறெனினும் கொளல் தீது மேலுலகம், இல்லெனினும் ஈதலே நன்று' என்னும் குறளின் கருத்து முதற்செய்யுளில் அமைந்துள்ள தறியத்தக்கதாம்.

8. எடுத்தொருவ ருக்கொருவர் ஈவதனின் முன்னே
தடுப்பது நினக்கழகி தோதகைவில் வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி யோயுனது சுற்றம்
உடுப்பதுவ முண்பதுவு மின்றிவிடு கின்றாய். (ஷை 33)

(இ-ள்.) மீட்டும் மகாபலி வெள்ளியைப் பார்த்து 'சற்குணமில்லாதோ! சுக்கிரரே! ஒருவர் மற்றொருவர்க்குக் கொடுக்கப் போவதைத் தடுப்பது உனக்குச் சரியா! ஈவதுவிலக்கும் ஏழையே! இத்தீய காரியத்தால் உனக்குக்கேடு விளைவித்துக் கொள்வது மல்லாமல், உன் சுற்றத்தாரையும் உண்ணவுணவும் உடுக்கவுடையு மின்றிக் கெடுக்கப் பார்க்கின்றனையே! எனக்கூறினன். ஆகையால் நாம் கொடாவிடினும் கொடுப்போரைத் தடுக்கலாகாது. இத்தகைய குணம் பொறாமைக் காரணமாக வுண்டாவதாகலின் அதை நீக்க முயலவேண்டும். இன்றேல் அன்னார் சுற்றம் உண்பது முடுப்பது மின்றியழியும். 'ஈவது விலக்கேல்' என்றார் ஔவையார். 'கொடுப்பதழுக்கறுப்பான்சுற்றமுடுப்பதூஉ-முண்பதூஉ-மின்றிக்கெடும்' என்னும் குறளின் பொருளைக் கொண்டது இச்செய்யுள்.

9. தீயவரோ டொன்றிய திறத்தரு நலத்தோர்
ஆயவரை யந்நிலை யறிந்தனர் துறந்தால்
சேயவரு நுண்பொடி படிந்துட னெழுந்தொண்
ப்பாய்பரி விரைந்துதறி நின்றன பரந்தே. (வரைக்காட்சி-20)

(இ-ள்.) ஆய்ந்தாய்ந்து பாராது தீயாரோடு நட்புக்கொண்டு பழகிப் பின்னவர்தம் தீக்குணங்களை யறிந்தழி, அவர் நட்பை விரைந்து விலக்கிய விவேகிகள்போல, மிதிலை செறிப்படரும் தயரதன் சேனையிலுள்ள குதிரைகள் தரையிற் படுத்துப்புரண்டு தம்சரீரத்தி லொட்டிய புழுதியை உடனே எழுந்து உதறிவிட்டு நின்றன. (எ-று.) ஆகையால் ஒருவரோடு சிநேகிக்குமுன்னரே அவரது குணகுணங்களைப் பலமுறையு மாராய்ந்து கொள்ளவேண்டும். நல்லாரெனக்கருதி நட்பாடியபின் அவர் மாட்டுத் தீயகுணங்களிருப்பக்காணின், வாசனைப் பொருளிருக்குமென் றெண்ணி ஒரு சிமிழியைத் திறந்தானொருவன் அதில் பாம்பிருக்கக் கண்டவுடனே எங்ஙனம் அதை வீசியெறிந்து,விலகிப்போவானோ அங்ஙனமே உடனே அவர்நட்பை விரைந்து விடல்வேண்டும் என்னும் நீதியை அறியக்கடவேமாக.

10. தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாருமஃதே
வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத் தன்னான் உருவுகண் டாரை யொத்தார்.

(உலாவியற் படலம்-19)

(இ-ள்.) ஸ்ரீராமன் மிதிலாபுரியின் வீதியில் பவனிவரும்போது அவரைக்காணவந்த மாதர்களுள், முதன்முதலாக அக்காகுத்தனுடைய தோளைக் கண்டவர்கள் அதன் அழகிலேயே ஈடுபட்டு அதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். பதாம்புயங்களைப் பார்த்தோர் அவற்றையேபார்த்துநின்றனர். கரத்தை நோக்கினோர் அதையே நோக்கினரன்றிப் பிறிதொன்றினையும் காண்கிலர். இவ்வாறே எவ்வெவர் எவ்வெவ்வுறுப்பைக்கண்டனரோ அவ்வவ்வுறுப்பையே கண்டனரன்றி அத்தாசரதியின் திருமேனியை முற்றக்கண்டார் ஒருவருமிலர். ஆதலின் இம்மாதர்கள், இந்நிலவுலகத்துள்ள எல்லாச் சமயங்கட்கும் ஒரே கடவுளாயிருக்கும் அப்பிரானை ஒவ்வொரு மதத்தினும் தனித்தனி வெவ்வேறு விதமாயிருப்பதாகக் காணும் மதபேதிகளை யொத்திருந்தனர் என்பதாம்.

“ஈன்றளித்தழிக்கும் செய்கைக்கேதுவா மயனாய் மாலாய், ஆன்ற வீசனுமாய்த் தானேயனந்த மூர்த்தியுமாய் நிற்கும்” என்றபடி, சிருட்டி திதிசங்கார நிமித்தம் பிர்ம விஷ்ணு ருத்திரர்களாகி யிருப்பது மன்றி, தானே யளவிறந்த மூர்த்திகளாயும் நிற்கும் முழுமுதற் கடவுளொருவரே யென்பதை யறியாதோரே எந்தெய்வ முன்தெய்வமென்று வழக்காடாநிற்பர். இது அறியாமையே யென்பது இச்செய்யுளி னீற்றடியால் பெறப்படும். இது அவ்விராமபிரானது தோளையே கண்டோர் அத்தோளே இராமனென்றும், தாளைக்கண்டோர் அவனது வடிவம் காலின்வடிவே யென்றும் கூறுதல் ஒவ்வாமைபோல, இரண்டாவதற்ற அகண்ட சச்சிதானந்தப் பரம்பொருளைக் கண்டப்படுத்தி, மாயாகாரிய சரீரத்தோ டிருக்குமவனை யச்சிறு வடிவினனாகவே பாவித்தலும் ஒவ்வாதென்பது இச்செய்யுளின் உபமேய முகத்தாலறிக. ‘ஆறுசமயங்கள் தோறும் வேறுவேறாகி விளையாடு முனையாவரறிவார்! ‘மூவுருவும் ஒருருவாய் நின்றமூர்த்தி,’ என்னும் ஆன்றோர் வாக்கே போதியசான்றாம். ஆகையால் எல்லாமதத்தோராலும் வணங்கப்படுபவனும் எல்லா நாமங்களாலும் அழைக்கப் படுபவனும் ஒருகடவுளே யென்பது நன்கு விளங்குகிறது.

சில குருடர்கள் யானையைக் காணச்சென்று கரங்களால் தடவிப்பார்த்த பின்பு அவர்களில் காலைத்தடவிப் பார்த்தவன் யானை தூண்போலிருக்கின்றதென்றும், துதிக்கையைத் தொட்டோன் உலக்கைபோ லிருக்கிறது யானையென்றும், செவியைப் பார்த்தவன் யானை முறம்போ லிருக்கின்றதெனவும், வாலைப்பார்த்தவன் யானையைத் துடைப்பத்திற் கொப்பிடலாமெனவும் கூறியதாகக் கூறப்படும் கதையும் இதனோடு ஒப்பிடத்தக்கது.

(இன்னும் வரும்.)

பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர்,
இராணிப்பேட்டை.

சர்வம் - சக்திமயம் - ஜகத்!

நாம் உலகத்தில் முன்னுக்கு வரவேண்டுமானால் நமக்கு அவசியம் மூன்று சாதனங்கள் வேண்டும். அதாவது பணம், படிப்பு, பலம். இந்த மூன்றோ, அல்லது இரண்டோ, ஒன்றோ இருந்தாலொழிய நாம் எதையும் சாதிக்க முடியாது. இந்த மூன்றையும்தான் நாம் மூன்று தேவிகளாகக் கொண்டாடுகிறோம். அதாவது பணத்தை இலக்ஷ்மியென்றும், படிப்பை சரஸ்வதியென்றும்,பலத்தை சக்தியல்லது பார்வதியென்றும் பூஜிக்கிறோம். மேல் நாட்டார் (Ladies and Gentlemen) என்று சொல்லுகிற மாதிரி நம்முடைய தேவதைகளையும் விசாலாக்ஷி சமேத விசுவநாதர், இலக்ஷ்மீ சமேதநாராயணர் என்றே கூறுகிறோம்! அதாவது சக்தியை முன்வைத்து தான் சுவாமியை வேண்டுகிறோம். இந்த உலக ஜனத்தொகைக் கணக்கைப் (World Census) பார்த்தாலும் அதில் புருஷர்களைக் காட்டிலும் ஸ்திரீகள் கொஞ்சம் அதிக கணக்காகவே இருக்கிறார்கள். இங்கிலீஷ்காரர்களைப் போல் பார்யாளை உயர்ந்த பாதி (Better-half) என்று நாம் சொல்லாவிட்டாலும் அவள் அர்தாங்கி என்று சமத்துவம் அங்கீகரிக்கிறோம்! ஆனால் சூர்யபகவானும் வாயுபகவானும் காணக்கூடாத மஹம்மதீய "கோஷா" சாம்பிரதாயமில்லாமலும், மற்றும் மேல் நாட்டாரைப்போல் (Militant Suffragette)வோட்டு முதலியவைகளுக்குச் சண்டை போடக்கூடிய அநாகரீகமுடையவர்களாக இல்லாமலும், ஹிந்து மதஸ்தர்களாகிய நம் ஸ்திரீகள் சுவதந்திர விஷயத்தில் கிரமமான நடு நிலைமையில் இருக்கிறார்கள். இந்த இந்தியாவில் இப்போதுள்ள ஸ்ரீமதி சரோஜனியாருக்கும் சாரதாதேவியாருக்கும், கல்வியிலும் குணத்திலும் சமம் எந்ததேசத்தி லிருக்கிறார்கள்? அது போகட்டும். நம்முடைய இந்தியாவில் பெரியநகரம் எது? கல்கத்தா அல்லது காளிகட்டம்! அதாவது இந்தக்கலியுகத்தில் காளி அல்லது சக்தி இருக்கும் இடந்தான் நம்முடைய பாரதகண்டத்தில் முதல் நகரமாகவும், பிரிடிஷ் இராஜாங்கத்திலேயே இலண்டன் பட்டணத்திற்கு இரண்டாவதாகவும் இருக்கிறது! அதேமாதிரிதான் தென் இந்தியாவிலும் மதருசுக்கு இரண்டாவது நகரம் மதுரை, அதாவது மீனாக்ஷியம்மை எழுந்தருளிய இடம்; ஆகையால் எப்படிப் பார்த்தாலும் இந்த உலகசம்பத்தும் சுகமும் சக்திஸ்வாதீனமாகவே இருக்கின்றனவென்று நமக்கு நன்குவிளங்குகிறது. ஆகையால் நாம் "வந்தேமாதரம்" என்னும் மந்திரத்தை மறக்கக்கூடாது. மேலும் முக்திக்கும்சக்தி முக்கியமில்லை யென்று சொல்லக்கூடாது, ஏனென்றால் சுருதிகளும் "மாத்ருதேவோபவ" வென்று கோஷித்திருக்கின்றன!

உ - துரைசாமி ஐயர்,
வாலாஜா.

"இரண்டு படுபொய்கள்" என்ற படுமோசம்.

யாழப்பாணத்திலுள்ள ஸெயின்ட் ஜோஸப் அச்சுக்கூடத்தில் வெளியான ஒரு துண்டுப்பிரசுரம் நமது சந்தா நண்பர் ம-ா-ா-ஸ்ரீ, பெ. அ. கந்தையாப்பிள்ளை (அம்பலக்கோடா) அவர்களால் நமது பார்வைக்கு (அதன் உண்மையைப்பற்றிச் சஞ்சிகையில் வெளியிடக்கோரி) அனுப்பப்பட்டது.

அதில் "இரண்டு படுபொய்கள்" என்ற தலைப்பின் கீழ் ஒரு விஷயம் வரையப்பட்டிருக்கிறது. அதில் கையொப்பமில்லை யெனினும் ஒரு கிரு ஸ்தவராலேயே அது எழுதப்பட்டதென்று வெளிப்படையாய் விளங்கு கிறது. கீழ்க்கண்ட இரண்டு காரணங்களால் அதிலுள்ள ஆபாசங்களை விளக்கிக்காட்டி அதன் மோச எண்ணத்தை நாம் வெளியிடவேண்டியது அவசிய மாயிற்று. அக்காரணங்கள்:—

1. சமய ஆராய்ச்சிசெய்து பார்த்த உள்ளமுடையோரும், கடவுளின் உண்மை நிலையையுணர்ந்தோருமாகிய மகான்களும், எச்சமயப் பெரியாரும் ஒப்புக்கொண்டு நிரப்படுத்தியுள்ள சத்திய மொழிகளையே இரண்டு படுபொய்கள் என்று அப்பிரசுரம் கூறுகிறது. அத்தகைய அஞ்ஞான மனப்போக்கைப் பாமரர் கண்டு மயங்கிக் கெடாவண்ணம் கண்டிக்கவேண்டியது, எல்லோரும் ஆண்டவனருளைப்பெற வேண்டுமென்று கருதும் ஒவ்வொருவர்க்கும் கடமையாயிருக்கிறது.

2. பிற மதஸ்தரை, முக்கியமாய் இந்து மதஸ்தரை மயக்கித் தந்திரமாய்த் தம் மதத்திற்கு இழுக்கவேண்டுமென்ற படுமோச எண்ணங்கொண்டே அது வெளி வந்திருக்கிறது. சைவசமயத்தையும், மகம்மதிய சமயத்தையும் பொய் என்று பகிரங்கமாய்த் தூஷிக்கிறது.

இனி அது எவற்றை "இரண்டு படுபொய்கள்" என்று கூறுகின்றதெனில்,

1-வது—எல்லா மதங்களும் கடவுளுக்குச் சம்மதமே. எல்லா மதங்களிலும் இருந்து பிரகாசிப்பவர் ஒரு கடவுளே.

2-வது—அவனவன் தன் தன் மதத்தைக் கைவிடலாகாது.

நேயர்களே! இந்த உண்மைகளைப் பொய்யென்று கூறும் மனம் எத்தகைய அந்தகார அஞ்ஞானம் நிறைந்ததாக விருக்கவேண்டும் என்பதை அறிவாளிகளே அறிந்து கொள்ளலாம். எங்கும் பெரு வெளியாய், ஏக ஒளியாய், அகண்டாகாரமாய் வாக்கு மனதிற்கெட்டாது, சமயாதீதமாய் விளங்கும் எல்லையற்ற அகண்டாகாரசொரூபத்தை இந்த ஆபாசக்கூற்று ஒரு சிறு புத்தகத்தில் வரையறுத்து அடக்கிவிட்டது.

வெளிச்சத்தை இருளென்பதுபோல் பேரறிவாளர் கண்டறிந்த சத்தியத்தை,மூடர் தவிர வேறெவரும் மறுக்கப்படாத சத்தியத்தைப் படுபொய் யென்று வாய் கூசாது மனம் நாணாது கூறிவிட்டு, இன்னும் இது காட்டும் நியாயமும், கொண்டுள்ள முடிவும் மிக்க விநோதமே. எவ்வாறெனின்,

"கடவுளால் ஏற்படுத்தப்பட்ட மெய்யான சமயம் எது என்று தேடி அறியவேண்டியதில்லையா? அப்படியாயின் மகம்மதியரும் தங்கள் வேதம் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட தென்கிறார்கள். சைவரும் தங்கள் வேதம் கடவுளால் ஏற்படுத்தப்பட்டதென்கிறார்கள். இப்பல சமயத்தவர் கூறுகிறபடி வெவ்வேறு வேதமிருந்தால் வெவ்வேறு கடவுளும் உண்டு என்ற அபத்தத்தை அங்கீகரிக்கவேண்டி வரும்......" என்று நியாயங்கூறி முடிவில் கிருஸ்து மதம் ஒன்றே கடவுளால் ஏற்படுத்தப்பட்ட மதமென்றும், அதில் கூறப்பட்ட கடவுளே மெய்யாக இருக்கிற கடவுள் என்றும், மற்ற சமயங்களில் கூறப்பட்ட குணங்குறிகளுள்ள கடவுள் எங்கும் இல்லை

யென்றும், கிருஸ்து வேதத்தை யனுசரிக்கும் சமயம்மட்டும் அவர் சமூகத்தில் செல்லும் என்றும், மற்றசமயங்களும் அவற்றில் கூறப்பட்ட கடவுளும் எல்லாம் பொய்யென்றும், மற்ற மதத்தவரெல்லாம் தண்டிக்கப்படுவார்களென்றும் ஒரே தீர்மானமாய்க் கூறிவிட்டு, மற்ற மதஸ்தர்கள் தங்கள் தங்கள் மதத்தை வெறுத்துவிட்டு கிருஸ்து மதத்திற்கு வந்துவிட்டால்தான் கடவுள் மன்னிப்பார் என்று முடித்திருக்கிறது. கிருஸ்து மதமே ஆதிமதம் என்றும் அதையே இயல் வேதம் என்ற படியில் நமது முன்னோர் அனுசரித்து வந்தார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

நமது முன்னோர் என்பது யாரை? ஐரோபாவிலுள்ளோரை யென்றால்தான் பொருந்தும். இரண்டாயிர வருடங்களுக்கு முன் எந்தக்கிருஸ்து மதம் இருந்தது. கிருஸ்துவால் உண்டாக்கப்பட்ட மதம் ஒன்றே ஆதியும் உண்மையுமாயின் அதற்குப் பல்லாயிர வருடங்களுக்கு முன்முதல் இருக்கும் வேதமும் மதமும் பொய்யோ? அப்படியாயின் அப்போதெல்லாம் கிருஸ்து மதக் கடவுள் தூங்கிக்கொண்டிருந்தார் போலும். அந்த ஆன்மாக்களெல்லாம் அழிவதைப் பார்த்துக்கொண்டு பேசாமலிருந்தாராக்கும். இப்போதும் அவர்களைப் பொய் மதங்களில் பிறப்பித்துக்கொண்டு விழிக்கிறாராக்கும். அப்படியாயின்அவர் நல்ல கருணையான கடவுளே. அவருக்கும் அவர் வேதத்திற்கும் மிக்க வந்தனம்.

அந்தோ கிணற்றுத் தவளையே! நின் ஆணவமலம் நிறைந்த அந்தகார மதி யிருந்தவாறென்னே? நாம் கூறுவது போலவே ஒவ்வொரு மதஸ்தரும் கூறுவதாயின் எந்த மதத்திலுள்ள கடவுள் வந்து இதற்கு முடிவு கூறுவார் என்பது நினது மதியிற்றோன்றாதவா றென்னேயோ!

நண்பர்களே! நமது சஞ்சிகையில் மேற்கண்ட உண்மையைப்பற்றிப் பன்முறை பிரஸ்தாபித்து எச்சமயத்தும் இயற்கையை விட்டிடலாகாது என்ற ஆன்றோர் வாக்கைப்பற்றியும் கூறியுள்ளோம். "மகம்மதிய மதமும், சைவசமயமும் பொய். அவற்றிற் கூறப்பட்ட கடவுளும் பொய்" என்று வெளிப்படையாகப் பிறமதஸ்தர் மனம் புண்படும்படி மொழியும் இவர்களுக்கு, நாம் நமது மதஸ்தரை நோக்கி, "அன்னிய மதம் போதிக்கப்படும் பாடசாலைகளுக்கு நமது பிள்ளைகளை யனுப்பவேண்டாம். நீங்கள் நம் மதத்தைவிட்டுப் புறச்சமயம் புகவேண்டாம்" என்று கூறுவது மன எரிச்சலை யுண்டாக்குகிறது. அப்படி நாம் கூறுவதை "உங்கள் சஞ்சிகையில் கிருஸ்துமத தூஷணையிருக்கிறது" என்று அண்டப்புளுகாய்ப் புளுகுகிறார்கள். இவர்கள் இப்படி யெழுதுவது மத தூஷணையல்லவாக்கும். சத்தியத்தைப் பொய் யென்பார்க்குப் புளுகுவது சர்க்கரை நக்குவது போல் தானே. தனக்குண்டு எதிர்க்கில்லை யென்பது எத்தகைய மேலான நியாயம்!

நண்பர்களே! இங்கிருந்து பெங்களூருக்குச்செல்ல ஆறு வழிகளுண்டு என்றால் அப்படியாய்ன் ஆறு பெங்களூர்கள் இருக்கவேண்டும் என்று எந்த அறிவாளியேனும கருதலாகுமோ?

நமது வேதத்தில் உலகில் இருக்கக்கூடிய மதக்கொள்கைகள் எல்லாவற்றைப்பற்றியும் கூறி அவரவர் கொள்கைப்படி அவரவர் கோரும் வண்ணம் அவரவர் தெய்வமாக நின்று அவரவர் வழிபாட்டையேற்று அருள் புரிபவர்

ஒரே கடவுளே என்ற உண்மை கூறப்பட்டு, நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதை யெவரும் மறுக்கமுடியாது. இதே உண்மையை விவேகானந்த ஸ்வாமிகள் அமெரிகாவில் கூடிய சர்வமத சங்கத்தின் முன் நிரூபித்தபோது யாவரும் ஒப்புக்கொண்டார்களே யன்றி எவராலும் மறுக்கமுடியவில்லை. கண்ணுள்ளவர்கள் எல்லாம் சூரியன் பிரகாசமாக விருக்கிறதென்றே கூறுவார்கள். குருடனும் அவன் போன்ற மற்ற குருடரு மட்டுமே "இல்லை யில்லை, சூரியனும் இருட்டே" என்பார்கள்.

சகோதர சகோதரிகளே! இனியேனும் இத்தகைய வஞ்சகப் பொய்களை யெல்லாம் கூறித் தந்திரமாய் நம்மவரை மயக்கித் தங்கள் மதத்தில் சேர்க்கக்கூலிக்கு உழைக்கும் அன்னிய மதபோதகர்களின் பிரசங்கங்களுக்குச் செவி கொடாதீர்கள். அவ்வாறு வியர்த்தமாக்கும் காலத்தை நமது மதத்தைப்பற்றிய கல்வியைக் கற்பதில் செலவழியுங்கள். வலிய வந்து மயக்க முயலும் இவர்கள் பசப்பு வார்த்தைகளால் மயங்கி விடலாகாதென்று நம்மவர்க்குப் போதிப்பதை யொவ்வொருவரும் கட்டாயக் கடமையாகக் கைக்கொள்ளுங்கள்.

ஓம் தத்ஸத்.

மாணவர்களுக்கு ஹிதோபதேசம்.

மாணவர்களே! நீங்கள் உங்கள் வாழ்நாளைச் சரிவர நடத்தத் தேவையான சாதனங்களை அமைத்துக்கொள்ள, யாதொரு கவலையுமின்றி உத்ஸாகத்துடன் கல்வி கற்கும் இக்காலம் தான் ஏற்ற தருணம். ஆகையால் இதை வீணில் செலவழிக்காமல் பயனுள்ளதாகச் செய்வது உங்கள் கடமை. அப்படிச் செய்வதைப்பற்றிச் சில விஷயங்கள் கீழேகூறப்படும். அவற்றைக் கவனியுங்கள்.

முதலாவது கல்வி கற்பதின் முக்கிய நோக்கத்தை நீங்கள் அறிய வேண்டும். உங்களில் அநேகருக்குப் பரீக்ஷையில் தேறுவதுதான் உயர்ந்த லக்ஷியமாயிருக்கிறது. இதற்காக இவர்கள் படும்பாடு பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது. பரீக்ஷைக்கு முதல்நாளிரவில் கோழி கூவும் வரைப் புத்தகங்களைக் கண் பஞ்சடைய வாசித்துக்கொண்டிருந்து, எங்கு மறந்து விடுவோமோ என்ற திகிலால் பரீக்ஷைக்காக உள்ளே புகுவதற்கு முந்தியும் மரணத்தறுவாயிலிருப்பவன் தன்னருமைச் சுற்றத்தாரைக் கடைசியாகப் பார்ப்பது போலப் பார்த்துவிட்டுக் கேள்விக்கடிதம் கையில் கொடுத்ததும் உடனே பேனாவை எடுத்துத் தங்கள் ஞாபகத்திலிருந்த விஷயங்களை எல்லாம் எழுதிவிட்டு வந்து விடுகிறார்கள். காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்ததுபோல் இவர்கள் எழுதியதும் கேட்ட கேள்விக்குக் கொடுக்க வேண்டிய விடையும் ஒத்திருந்தால் தேறுகிறார்கள். இல்லாவிட்டால் அழுகை. இதற்கெல்லாம் காரணம் இவர்கள் நோக்கம் ஓட்டைச் செம்புக்கு சமானமாயிருந்ததுதான். பரீக்ஷை என்னும் பாத்திரத்தில் விஷயம் என்கிற நீரை அவசர அவசரமாக மொண்டு கொட்டுவது; வேண்டிய அளவு இருந்துவிட்டால் தேறுவது, இல்லையேல் இல்லை. இது பெருந்தவறு. இத்தகைய சிறு நோக்கம் கொண்டிருப்பதால் பலர் பரீக்ஷையில் தேறியும் கல்வி கற்காத சாமானியரிலும் கேடாக நடக்க ஹேதுவாகிறது. ஆகை

யால் நீங்கள் முதலிலேயே சிறந்த லக்ஷியத்தை முன்னிட்டுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் உங்கள் முன் சதா வைத்திருக்கவேண்டிய நோக்கங்களாவன:— எப்பொழுதும் நல்லதையே செய்யவேண்டும்; நல்லது எது கெட்டது எது என்பதை அறியவேண்டும்; அறிந்தபடி செய்ய உங்கள் தேகமும் மனமும் தயாராய் இருக்கவேண்டும். உத்தியோகம் செய்யவே படிக்கிறோம் என்ற எண்ணத்தை விட்டுவிட வேண்டும்.

இவற்றில் முதலில் சொன்ன நல்லதைச் செய்யவேண்டும் என்கிற விஷயத்தை சதா மனனம் செய்து நல்ல எண்ணம், நல்ல காரியம், நல்ல சொல் முதலியவற்றில் அத்தியந்த பிரியத்தையும் கெட்ட எண்ணம் கெட்ட காரியம் கெட்ட சொல் முதலியவற்றில் மிகுந்த வெறுப்பையும் உண்டு பண்ணிக்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, நல்லது எது கெட்டது எது என்பதை அறிய விஷயங்கள் நிரம்பத் தெரிந்து கொள்ளவேண்டும். அப்படித் தெரிந்துகொள்ளப் பல வழிகள் உண்டு; பிறர் சொல்லக்கேட்பது, நீங்களாகக் கண்டறிவது, புஸ்தகங்கள் மூலம் தெரிந்துகொள்வது என்னும் மூன்றும் முக்கிய வழிகள். இம்மூன்றிலேயே எல்லா வழிகளும் அடங்கும். இவற்றுள் நீங்கள் அதிகமாகக் கையாளுவது புத்தகங்களை வாசித்தல். எந்த வழியாக விஷயங்களைத் தெரிந்துகொண்டாலும் சரியே சந்தேகமற அறியவேண்டும்; அறிந்தவற்றை மறவாது ஒழுங்காக மனத்திடைப்பதிய வைத்துககொள்ள வேண்டும். இது போதும் என்றிராமல் மேன்மேலும் தெரிந்துகொள்ள முயலவேண்டும். ஆனால் புது விஷயங்களைத் தெரிந்துகொள்ளும் ஊக்கத்தில் பழைய சங்கதிகளை மறக்கலாகாது.

கடைசியாக, இவ்விரண்டினுக்கும் அடிப்படையாயுள்ள தேகத்தையும் மனத்தையும் பணபடுத்தும் விஷயததில் கவனத்தைச் செலுத்துவது அத்தியாவசியம். இது சிரமமான காரியம் என்பதற்கு ஆக்ஷேபனை இல்லை; ஆனால் கஷ்டப்பட்ட வரைக்கும் லாபம் உண்டு. முதலில் தேக சம்பந்தமாகப் பேசுவோம். தேக ஆரோக்யம் எந்தக காரியத்துக்கும் அஸ்திவாரம் போன்றது. ஆகையால அது விஷயத்தில் மிக்க கவலை எடுத்துக்கொள்வது அவசியம். அன்ன பானங்களில் ஓர் நியதிவேண்டும். எந்த உணவை உண்டால் தேகத்துக்கு, சோம்பல் மதமதப்பு முதலியவை இன்றிப் பலமும் சுறுசுறுப்பும் மாத்திரம் ஏற்படுகின்றனவோ அவ்வுணவே ஏற்ற உணவு. இதை ஒவ்வொருவரும் அனுபவத்தில் உணர்ந்து கொள்ளவேண்டும். அவ்வாறே பசி யடங்கும வரை கொள்ளக்கூடிய ஆகாரத்தின் அளவையும் கண்டறிந்து ஒருகாலும் அதனை மீறாமல் அருந்தவேண்டும். குடிப்பதற்கு முதல தரமானது சுத்த ஜலம். மற்றைய எல்லாம் அடுத்தபடியே. புகையிலை, வெற்றிலை முதலியவற்றை விலக்குங்கள், வெற்றிலையைச் சிலர் சிலாகிக்ககூடும். அது விஷயமான வாதம் இப்பொழுது வேணடாம். நீங்கள் அதைத தவிர்த்திருப்பதே நலம். பொதுவாக விசேஷ போகத்திற்குரியவற்றை (Luxuries) அறவே ஒதுக்குங்கள். தேகப்பயிற்சியை விடாது செய்தல்வேணடும. வேறு ஒன்றும செய்ய சௌகரியப்படாவிடினும் குறைந்தது நாலு மைல தூரம பிரதிதினமும் நடக்கலாம். இதனால் அளவற்ற நன்மையை அடைவீர்கள். தேகத்தையும் ஆடையையும் சுத்தமாய் வைத்திருப்பதுவும் முக்கியமானது.

இனி மனதை சம்பந்தமாகச் சில கவனிப்பாம். இந்தமனது ஒரு பெரிய குரங்கு; சதா அலைந்து கொண்டேயிருக்கும். கெட்ட விஷயங்களைச் சட்டெனப்பற்றும். ஆகையால் அதற்கு இடங் கொடுக்கலாகாது. அதை மெள்ள மெள்ள உங்கள் சுவாதீனத்தில் கொண்டுவரப்பாருங்கள். இதற்கு ஒரு சிறு வழி கூறுவோம்.

பிரதிதினமும் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்த பிறகு படிப்பு விஷயமாக இன்றைய தினம் இன்னின்ன காரியங்கள் செய்வது என்று ஓர் குறிப்புப் (Programne) போட்டுக்கொள்ளுங்கள். உதாரணமாகச் சரித்திரத்தில இன்ன அரசனின் ஆட்சி முடிய வாசித்தல், கணிதத்தில் இன்னின்ன மாதிரியில் இத்தனை கணக்குகள் போடுவது, வாசக பாடத்தில் இத்தனை பக்கங்கள் வாசித்துக் கடின சொற்களின் பொருளை அகராதி முதலியவற்றில் இருந்து தெரிந்து கொள்வது. இவ்விதம் காலையில் சங்கல்பித்தபடியே நடக்கவேண்டும். அப்படியே நடக்கமுடிகிறதா இல்லையா என்பதைப் பிரதி சாயந்திரமும் சரிபார்க்க வேண்டும். ஆனால் இவ்விதம் ஊக்கத்துடன் எண்ணிய காரியத்தில் கருத்தாயிருக்கும்போது இடையூறு நேரிட்டால் அமைதியையும் பொறுமையையும் பாராட்டவேண்டுமே யொழியக் கோபமும் படபடப்பு மடையலாகாது.

இப்படிச் செய்து வருவீர்களேயாகில் பரீக்ஷையில் தேறுவது மட்டுமன்றி, உங்கள் வாழ்நாளையும் இனிதாகக் கழித்து இறுதியிலும் இன்பத்தை அடைவீர்கள்.

C. V. சுப்பிரமணிய அய்யர்,
ஜலகண்டாபுரம் P.O.

தமிழ் மாதருக்கு ஆங்கிலக்கல்வி அவசியமா?

சகோதர சகோதரிகளே! தற்காலத்திலே காலத்திற்கேற்ற கோலங்களும், நாட்டுக்கேற்ற சட்டுக்களும், குலத்திற்கேற்ற குணங்களும், குணத்திற்கேற்ற கொள்கைகளும், பாஷைக்கேற்ற ஞானங்களும் ஆங்காங்கு உலாவுகிறதை நாங்கள் நாளுக்கு நாள் கண்ணாரக்கண்டும் காதாரக்கேட்டும் வருகின்றோம்.

அப்படியிருந்தும், சிறியேனாகிய நான் எங்களுக்கு நாளுக்கு நாள் அறிவைப் புகட்டிவருகின்ற ஆனந்தன் ஆங்காங்குப்போய் அனேக விஷயங்களை அனேகருக்கு ஊட்டி அவர்களைத் தீய வழியில் நின்று நீக்கியும் நல்வழியிற் செலுத்தியும் வருகின்றானென்பதை யுணர்ந்து என் சிற்றறிவுக் கெட்டிய வரையில் எழுதப்போகிற இவ்விஷயத்தையும் அவன் தமிழ் நாடெங்குஞ்சென்று நந்தமிழ் மாதாவின் புத்திர புத்திரிகளுக்கு ஊட்டி அவர்களை நன்னெறியிலே நாட்டி வைப்பா னென்று உணர்ந்து இதை வரையலானேன்.

நம் நாட்டுத் தமிழ் மாதருக்கு ஆங்கிலேயக்கல்வி அவசியமா வென்று ஆராயுமுன்னர், நம் சகோதரர்களுக்கு இது எது வரையில் பிரயோசனப் படுகின்ற தென்பதைப்பற்றிச் சற்றே ஆராய்வாம்: எங்கள் நாட்டு ஆடவர்களில் அனேகர் உயர்ந்த கல்விகற்று உயர்ந்த பட்டம்பெற்று இருக்கிறார்கள். அவர்கள் நோக்கம் முழுதும் உயர்ந்த உத்தியோகம் பண்ணவும்

தகுந்த சம்பளம் பெறவுமே. இதுவல்லாமல் இக்கல்வி யேற்றத்தின் அறிவுடைமையால் அவர்கள் தேகாரோக்கியத்தைத் தேடிக்கொள்ளவுமில்லை, தேசாசாரங்களைத் தெளிந்து கொள்ளவுமில்லை, நல் நடத்தைகளை நாடிக்கொள்ளவுமில்லை. இன்னும் இவர்கள் இக்கல்வி யேற்றத்தினால் அவசியமில்லா ஆசாரங்களைக் கையாண்டு கொண்டு தங்கள் வாணாட்களை வீணாட்களாக்குகின்றனர். இம்மட்டோ, விலைமாதருடன் குலமாதரைச் சேர்ந்து கும்மி யடிக்கச் சொன்னால் அப்படிச் செய்யக் குலமாதர் எவ்வளவு நாணுவார்களோ அவ்வளவு நாணும் வண்ணம் அருமையான எங்கள் தாய்ப் பாஷையாகிய தமிழுடன் சிற்சில சமயங்களில் ஆங்கிலத்தைக் கலந்து தேன்போன்ற தமிழை அலங்கோலப்படுத்தி விடுகிறார்கள்.

ஆடவர்கள் ஆங்கிலங்கற்றதினால் இவ்வளவு அலங்கோலங்கள் நம் தேசத்திலேற்பட்டிருக்கப் பெண்கள் கற்கவேண்டுமென்று ஆங்காங்கு ஆங்கிலேய வித்தியா சாலைகளுக்கு அவர்களை அனுப்புகிறதைப் பார்த்தால் ஒரு பக்கத்தில் வெட்கமும் மறு பக்கத்தில் துக்கமுமாயிருக்கிறது. தந்தைமார்களே! தாய் மார்களே! உங்கள் பெண் குழந்தைகளை என்னத்திற்காக ஆங்கிலேயங்கற்க அனுப்புகிறீர்கள்? அவர்கள் உத்தியோகம் பண்ணப் போகிறார்களா? அப்படித் தான் உத்தியோகம் பண்ணினாலும் விவாகஞ் செய்யாமலிருக்கப் போகிறார்களா? விவாகஞ் செய்துவிட்டால் இவ்வுத்தியோகம் எங்கே போய் விடும்? விவாகஞ் செய்யு முன்னமே கொஞ்சச் சம்பாத்தியமிருக்கட்டுமென்று உங்கள் மனதிற்படுமானால் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்று சொல்லப்படும் இந்நான்கு விசேஷ குணங்களும் எப்படி நடன மாதரிடமில்லையோ அப்படியே இவர்களிடமுமிருக்கமாட்டா தென்றறிந்து இவர்களை ஒருவரும் விவாவகஞ் செய்ய உடன்படார்களே. அப்போது இவர்கள் வெள்ளையர்களி லொருவரைத்தான் மணக்கப் போகிறார்களோ? அவர்களும் தன் சாதியை விட்டு வேறோர் சாதியிலே விவாகஞ் செய்யாதவர்க ளாச்சே. அம்மம்ம! இவர்கள் கதியென்னவாறும்?

இல்லாவிட்டால் தமிழ் மாதிடம்பிறந்து ஆங்கிலேய மாதிடம் வளர்ந்த ஒருவருக்கு விவாகஞ்செய்து கொடுக்கிற நோக்கமா? அப்படியிருந்தாலும் அவரிடந் தமிழ் மாதின் குணம் பாஷையெல்லாம் இயற்கையாயிருக்குமே. ஆகையால் அவர்களுக்கு ஆங்கிலேயங்கற்ற மாதர்தான் வேண்டுமென்று அவசியமில்லையே.

பிறதேசங்களிலே போய் உத்தியோகம் பண்ணும் தங்கள் நாயகர் எழுதும் காகிதங்களை வாசித்தறிய ஆங்கிலேயககல்வி அவசியமென்று சிலர் வாதாடுகின்றனர். அப்படி ஆங்கிலத்திலெழுதும் தமிழ் வீரவான் தமிழிலே வரைந்தனுப்பலாமே, தன் சொந்தப்பாஷையிலிருக்கும் பிழைகளைத் தன்மனைவி கண்டுபிடித்து விடுவாளென்ற நோக்கமா. அல்லது தன் ஆங்கிலேயத் திறமையைத் தன்னில்லாளிடம் காட்டவேண்டுமென்ற எக்கமா? எல்லாம் கருணைக் கடலாகிய இறைவனுக்கே அற்பிதம்.

ஆங்கிலேயங்கற்றால் பெண்கள் தேகாரோக்கியத்திற்கு வேண்டிய விதிகளையும் காலத்திற் கேற்ப உணவுப் பொருட்களைப் பாகம் பண்ண வேண்டிய முறைகளையும் அறிந்து காலத்திற்கேற்ற விதமாகத் தங்கள்நாயகரையும் குழந்தைகளையுங் காப்பாற்றுவார்களென்று சிலர் சொல்லுகிறார்கள். இவ்வாறு கூறும் புத்திமான்கள் தங்கள் தாய்ப்பாஷையிலிவைகளைப்

பற்றிக் கூறும் சாஸ்திரங்களனேக மிருக்கின்றனவென்று அறியவில்லைப் போலும். அப்படிச் சாஸ்திரக்கட்டுகளை ஆராய்ச்சி செய்ய நேரங்கிடையா விட்டாலும் ஆனந்தனின் பக்கங்களில் ஆங்காங்கு இவைகளைக் குறிக்கும் விஷயங்களை வாசித்தறிந்தாலும் போதுமே.

வீட்டைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டிய முறைகளையும், உணவுப் பொருட்களைப் பாகப்படுத்த வேண்டிய முறைகளையும், இன்னும் மற்றும் இல்லறத்திற்கு வேண்டிய முறைகளையுங் கூறும் சாஸ்திரக்கட்டுகள் அனேகம் எங்கள் தாய்ப்பாஷையி லிருக்கின்றனவே. அவைகளை அனேகர் படித்தறியாமற் பரதவித்து ஆங்கிலேயத்தில்தான் ஆறுதலைக் கொடுக்கும் விதிகளையும் முறைகளையுங் கூறும் சாஸ்திரங்கள் அனேக மிருக்கின்றனவென்று ஏமாந்து தங்கள் பெண்மணிகளை மண்மணிகளாக்குகின்றனர்.

இன்னும் அனேக சீர்திருத்தங்களையும் அதிக தேர்ச்சியையும் ஆங்கிலக்கல்வியினால் பெண்கள் அடைந்து விடுகிறார்களென்று அனேகர் பறைமுழக்குகிறதை யான் கேள்விப்பட் டிருக்கிறேன். உலகிலே ஒருவர் ஒழுக வேண்டிய முறைகள் நாயனாரால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட திருக்குறளிலும் பார்க்க எந்தப்பண்பிலே எந்த நூலிலே விசேஷமாகக் கூறப்பட் டிருக்கிறது? நஞ்சகோதரிகள் ஏன் ஆங்கிலேயத்தி லமிழ்ந்திக்கிடக்கும் நேரத்தை இவ்வகையான தமிழ் நூல்களிலே செலவழிக்கக்கூடாது? அதிக சிரயங்கொடுத்து ஏன் அவசியமில்லாப் பஷையைக் கற்றுக்கொள்ள வேண்டும்? ஏன் அன்னிய ஆசாரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்? நாயனார் நூலே இல்லறத்திற்கு வேண்டிய முறைகளையும் ஒழுங்குகளையுங் கூறுவதல்லாமல் எங்கள் ஆன்மா கடைத்தேறக்கூடிய வழியையுங் காட்டி வைக்கிறது. அது தமிழ் வேதமல்லவோ!

சிலர் ஆங்கிலேய பாஷை உலகெங்கும் தெரிந்த ஓர் பஷையானபடியால் எல்லாரும் அந்தப்பாஷையை அவசியம் கற்றிருக்க வேண்டுமென்று ஆர்ப்பரிக்கிறார்கள். அவர்கள் அப்படிக் கூறுமுன்னர் தங்கள் பெண்கள் இன்றைக்கு முன்னராவது, அல்லது இப்போதாவது ஆடவரில்லாமல் வெளியேறின துண்டாவென்று சற்றே யோசிக்கட்டும். இதுவரையிலாவது அல்லது இனிமேலாவது அவர் தனிமையாகப் பிரயாணம் பண்ணவுமில்லை, பிரயாணம் பண்ணப் போகிறதுமில்லை. ஆகையால் அவர்களுக்கு ஆங்கிலேய பாஷை ஏன்?

தமிழ்க்கல்வியிலேயும் பெண்களுக்கு வேண்டியவைகளையே அவசியமாகக் கற்பிக்கவேண்டும். அவசியமில்லா உயர்ந்த நூல்களைக் கற்கவைத்தால் சிற்சில வேளைகளில் கெடுதலாயும் முடியும். ஏனென்றால் பெண்களோ மனத்திண்மை குறைந்தவர்கள். அவர்கள் தாங்கள் அதிகங்கற்றுக் கொண்டோமென்ற செருக்கினால் பிரசங்கஞ்செய்ய வெளிக்கிளம்பினால் சீக்கிரத்திலே கெட்டுப்போவார்கள்.

ஆங்கிலேயக் கல்வியில் உயர்ந்த பரீட்சை கொடுத்து அறிந்துகெட்ட பெண்கள் சிலரும் அறியாமற் கெட்டவர்கள் அனேகரும் இருக்கிறார்கள். ஆனால் நஞ்சகோதரிகளுக்கு ஏன் தமிழ்க்கல்வியினால் மோசமுண்டாகாதென்றால், தமிழ்க்கல்வியேற ஏற அறிவுமேறிக்கொண்டேவரும். துன்மார்க்கம் விலகிச் சன்மார்க்கம் நெருங்கும். பதிவிரதாத்தன்மை அதிகரிக்கும்.

ஏனெனில் தமிழ்நூல்களில் ஆன்மார்த்தம், கற்பு, தெய்வவழிபாடு இவை கூறப்பட்டிருக்கின்றன.

முற்காலத்திலே ஆங்கிலேயங்கல்லாத பெண்களில் எத்தனையோபேர் சிறந்த கற்பரசிகளா யிருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு யார்தான் தற்காலத்திலே நிகரானவர்களுளர். முற்காலத்திலே சீர்திருத்த மில்லையேயென்று சிலர் கூறுவார்கள். இவர்கள் சமீபகாலத்தையே முற்கால மென்பார்கள். அனேகவருஷங்களுக்கு முன்னே இருந்த திருத்தங்களெல்லாம் சமீபத்தில் கொஞ்சகாலத்தில் கெட்டிருந்தன. அக்காலத்தையே அனேகர் குறித்து, தாங்களிப்போது அனேக சீர்திருத்தங்களை அடைந்திருக்கிறோமென்று மெச்சிக் கொள்ளுகிறார்கள். முற்காலத்திலே விசேஷ சீர்திருத்தங்களும் நாகரீகங்களும் நமது பாதகண்டத்திலே யிருந்திராவிட்டால், நாயனார் தங்கள் நூலிலே இவ்வளவு சீர்திருந்திய முறைகளையும் படிப்பினைகளையுங் கூறியிருக்கமாட்டார். அந்நாகரீகம் ஒருவகையாலும் தற்காலத்திலுங் குறையவில்லை.

இருவகையான நாகரீகம் தற்காலம் பெண்களுக்குள் நிகழ்கின்றது. ஒரு சாரார் தங்கள் நாயகர் காலையிலே நித்திரை விட்டெழுந்து வேலைக்காரரிடம் காப்பியாவது, தேநீராவது வாங்கிப் பானம்பண்ணிவிட்டுத் தங்கள் உத்தியோகத்திற்குப் போனதின்பின் நித்திரை விட்டெழுபவர். இவர்கள் நித்திரை விட்டெழுந்தவுடன் ஸ்நானம் செய்யமாட்டார்கள். ஏதோ தங்கள் கால்முகத்தை கை நோகாமல் துடைத்துவிட்டுக் காலைப்போசனத்திற்காவது, மற்றும் நேரப்போசனத்திற்காவது வேலைக்காரரைப் பார்த்திருப்பார்கள். மற்றவர், தங்கள் நாயகர் நித்திரை விட்டெழுமுன், நித்திரை விட்டெழுந்து வீட்டுக்கருமங்கள் யாவையும் சூரியோதயத்திற்கு முன் முடித்து சலக்கரையை யடைந்து ஸ்நானஞ் செய்து, தங்கொழுநருக்கு வேண்டிய கடமைகளைச்செய்து அவரவர் முயற்சிக் கனுப்புவர். எது விசேஷமான நாகரீகமென்று நீங்களே யோசித்துப்பாருங்கள்.

ஆகையால் சகோதரிகளே! "தமிழ்க்கல்வி நாகரீகத்திற்கு வழிகாட்டாது. வீட்டுக் காரியங்களைப் பார்க்கும் முறைகளைக் கூறாது. ஆகையால் நாங்கள் ஆங்கிலேயந்தான் கற்கவேண்டும்" என்ற எண்ணத்தைவிட்டு விடுங்கள். உங்களுக்குத் தேவையான வரையிற் கற்கத் தமிழ்மாது இடங்கொடுப்பாள். ஆகையால் தமிழ்மாது மகிழ அவளை நாமெல்லாம் ஆதரிக்க வேண்டுமாய்க் கருணைக்கடலாகிய சிவபெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

மகேஸ்பரி,
தமிழ் நாடு, லங்கா.

இருதயவியாதி அல்லது பித்தவாய்வு

இந்த வியாதியைச் சாதாரணமாய் மேல் நாட்டார் Heart Disease. (இருதய வியாதி) என்றும் கீழ்நாட்டார் பித்தவாய்வு என்றும் சொல்லுகின்றார்கள். இந்த வியாதியானது (Bile என்னும் Hydrochloric acid) பித்தநீரும் காற்றும் ஒன்றசேர்ந்து இருதயத்தில் இரத்தத்தின் பகுதியைக் குறைத்தும் இரத்தத்துடன்கலந்தும் வியாபிக்கும் பட்சத்தில் உண்டாவது. அப்போது மார்வலியும் அல்லது குத்தல், எரிச்சல், மார் அடைப்பு இத்த

கைய வியாதிகளில் எதாவதொன்று காணும். இவற்றுள் சிலர்க்கு விட்டு விட்டு மார் இலேசாய்குத்தல் அல்லது வலியுண்டாகும். சிலசமயங்களில் ஜீரணப்பையில் கோளாறு எற்பட்டாலும் வலியுண்டானுலும் அதனுலும் மார் வலிப்பதுபோல் தோன்றும். ஆனல் அதைப்பித்தவாய்வு என்று சொல்லக் கூடாது; அதைப் பித்த குன்மம், அல்லது பித்த அஜீரணம் என்று சொல்லுவார்கள். இத்தகைய வியாதிகளுக்கு மேல்நாட்டார் சாதாரணமாய்ச் சிகிச்சைசெய்தும் குணப்படுத்திக்கொண்டும் வந்தாலும் அவ்வியாதிக்குத் தகுந்த ஔடதம் ஒன்றும் இதுவரையிலும் கீழ்க்கண்ட ஔடதங்களைத் தவிர மேலானதும் கட்டாயமாய்க்குணம் செய்யக்கூடியதும் மேற்படி வியாதியை நிவர்த்திக்கக் கூடியதும் கண்டு பிடிக்கப்பட்டதாய்த தெரியவில்லை. ஆனுல் தற்சமயம் மேல்நாட்டரர் செய்யும் சிகிச்சைகளில் இருதயவியாதி என்னும் பித்தவாய்வுக்கு (Tincture Digitalis) டிஞ்சர்டிஜிடலிஸ், டிஞ்சர் ஸ்டிக்கனைன், எக்ஸ்டிராக்ட் காக்டி என்னும் ஔடதங்களையே வெகுவாய் உபயோகப் படுத்தி வருவதாய்த் தெரிகின்றது. கீழ்நாட்டார்களில் அநேகர்களுக்குப் பித்தவாய்வு என்னும் வியாதியையே மேல் நாட்டார் இருதய வியாதி என்றும் கொடுமையான வியாதி என்றும் சொல்லுகிறுர்கள் என்று தெரியாமலிருப்பதால், இருதயவியாதி என்பது என்னமோ ஒருவியாதியென்று மதிக்கின்றுர்கள். ஆனுலும் பித்தவாய்வு என்று சொல்லவும் அதற்கு ஔடதம் கொடுக்கவும் அநேகர்களைச் சொஸ்தபபடுத்தவும் செய்கிறுர்கள். அவற்றுள் பலர் விரோசனம் கொடுத்து சொஸ்தப் படுத்துவார்கள் சிலர் விரோசனமில்லாமல் லேக்கியங்களினுலும் கியாழங்களினுலும் சொஸ்தம் செய்கின்றுர்கள். அவற்றுள் விரோசனத்தினுல் குணம் செய்யும் சிகிச்சை அபாயகரமானதும் உபயோக மற்றதும் என்று கருதவேண்டும். இருதயத்தின் கண்ணுள்ள பித்தத்தையும் காற்றையும் அவ்விடம்விட்டு நிவர்த்தி செய்யப் பித்தத்தை மாற்றும் விஷத்தை இரத்தத்தில கலக்கும்படி செய்யக்கூடியதும் இரத்தத்தின் மதியில் காற்றை நிற்கவொட்டாமல் நிவர்த்தி செய்யக்கூடியதுமான விஷசம்பந்தமான ஔடதத்தை உபயோகிக்கவேண்டும். அத்தகைய விஷத்தையுடைய ஔடதங்களாகிய, வில்வாதிலேக்கியம், பரங்கிச் சக்கைலேக்கியம், திப்பிலிலேக்கியம், நெல்லிக்கனி லேக்கியம், மிளகுலேக்கியம், முதலாகிய லேக்கியங்களினுலும் அல்லது கியாழங்களினுலும் சொஸ்தம் செய்வது உத்தமமென்று அப்படியேஅநேகர்செய்து வருகின்றுர்கள. யூனானி சிகிச்சைகளில், முத்து, காருபா, யஷாம், பாவுசார், கெம்பு, தங்கம் இன்னும் சிலவித்துகளும் சேர்த்து ஷர்பத்துகளால் அரைத்துக் கிருதபதம்செய்து உபயோகப்படுத்திக்கொண்டு வருகின்றுர்கள்.இத்தகைய சிகிச்சைகளில் மேல்நாட்டார் செய்யும் சிகிச்சையைவிடக் கீழ்நாட்டுச் சிகிச்சைகளே மேலானவையென மதிக்கவேண்டும். ஆனுல் மேல்நாட்டார் சொல்லும் தோஷங்களில் முக்கியமாய் (Heart) இருதய வியாதியைக் கண்டுபிடிக்கும் திறமை கீழ்நாட்டுவைத்தியர்களுக்கு இல்லை என்றும் அதற்குச்சிகிச்சை செய்யவும் அவர்களுக்குத் தெரியாதென்றும் சொல்லுகின்றுர்கள்.

(இன்னும் வரும்)

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்.

இல்லறம்—கன்மம்.

(223-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுகாறும் கூறியவதனால் எல்லாம் கன்மத்தான் முடியுமெனவே முடிகின்றது. எல்லாங் கன்மத்தால் முடியுமானால் தெய்வத்தால் யாது பயன்? என்பது ஓர் பெருங்கேள்வி. இதன் கருத்துயாதெனில், கன்மத்தால் எல்லாமாகும் என்பது ஒருவாறு பொருந்தும். யாங்ஙனமெனில் நீர், தீ முதலிய பொருள்களுக்குத் தண்மையும் வெப்பமும் இயற்கைக் குணமாம். இப்படியே ஒவ்வொரு பொருளினிடத்திலும் சில இயற்கைக்குணமுண்டு. அவ்வவற்றை யுபயோகிப்பதினால் அவை தத்தம்பயனை அளித்தே தீரும். அறிவுள்ளார், அறிவில்லார் என்கிறபேதம் கருதாது யாவரிடத்தும் ஒரேபயனை யளிக்கும். எங்ஙனமெனில் தீயைத்தொட்டால் அது அறிவுள்ளவனையும் சுடும். அறிவில்லாதவனையும் சுடும். நீருமப்படியே யாவருக்குந் தன் குளிர்ச்சியாகிய பயனையளிக்கும். அவை இப்பயன்களை யளிப்பது அவற்றுக்கு இயல்பாயமைந்த சக்தி. ஆதலால் அதற்கென வேறு ஒரு அறிஞனைத் தேடவேண்டுவதில்லை. தீயையும் நீரையும்போலக் கன்மத்துக்கும் அகக்கரண புறக் கரணங்களைச் சுத்தியாக்கி ஞானத்தை விளக்கும் சகதி இயல்பா யமைந்திருக்க அதன் பயனைத் தருவதற்குக் கடவுள் என்ற வேறொரு அறிஞனை அவாவுவதேன்? ஏனெனில் ஒரு அறிஞனது கட்டளையும் உதவியுமில்லாமலே அக்கினி சுடுதலும் நீர் குளிர்ந்திருப்பதும் இயற்கையிற் காணப்படுகின்றது. அதுபோலக் கன்மத்திற்கும் பலனை யளிக்கும் சக்தியியற்கையில் அமைந்திருத்தலாமென்க. உலகத்திலிருக்கும் பொருள்களெல்லாம் தம்மியல்பில் அமைந்த பயனைத் தாமே கொடுப்பது பிரத்தியட்சமாதலால், மீமாஞ்சகர் கருத்துப்போலக் கன்மம் ஒன்றேபோதுமென்று கொள்ளலாம். அல்லது சில வேதாந்திகள் கூறுவதுபோலக் கடவுள் ஒன்றே போதுமெனக் கொள்ளலாம். இரண்டையும் தழுவுதல் அநாவசியமாம் என்பது.

காலமிடம் பொருள்களைப் பற்றிக் கன்மம் பலவுருவமாமென்று முன்னர்க்கூறினும். பலவுருவம் பெற்றகன்மம் ஒன்று கூடியே பயனளிக்கின்றது. அக்கன்மம் அசேதனம். அசேதனமான எந்தப்பொருளும் ஒரு வறிஞனது பிரேரணையாலன்றித் தன்பயனைக் கொடுப்பதில்லை. அரிசி முதலிய தானியங்களுக்குப் பசியைத்தணித்துச் சரீரத்தை வளர்த்து வரும் சக்தியியல்பி லமைந்ததே. ஆயினும் அது கடையிலிருந்து கொண்டேயாவது, வீட்டில் பானையிலிருந்து கொண்டாவது பயனளிப்பதில்லை. அறிவுள்ளவனாகிய ஒருவனானவன் அதைப்பாகம்பண்ணி உட்கொண்டாலன்றித் தன் பலனாகிய பசிதீர்த்தலை யது செய்வதில்லை. பேரீந்து பித்தத்தை ஒழிக்கும் சக்தியுடையதே யாயினும் அது மாத்தி விருந்துகொண்டாவது கடையி லிருந்து கொண்டாவது தன் பலனைத் தருவதில்லை. அறிவுள்ள ஒருவன் அதன்குணத்தையறிந்து கூறக்கேட்டு அதைஉண்டவனுக்கே அது தன்பயனைத்தரும். இவை பிரத்தியட்சமாம். அதுபோலக் கன்மமும் அசேதனமாம் (சடம்) ஆதலால் அது தன் பயனைத்தரும் ஆற்றலுடையதல்ல. மற்றொரு அறிஞனை அவாவியேநிற்கும். ஆதலால் கன்மங்களெல்லாம் பொதுவிலாவது நேரிலாவது பரம்பரையில் ஆன்மா, மனம், சரீரம் இவற்றைச் சுத்தியாக்கும் சக்தியே யியற்கையிற் பெற்றுள்ளன. அச்சுத்தி மனத்தின்

வழியாய் ஆன்மாவைப்பற்றும். ஆன்மாவோ அணுரூபமாயுள்ளது. அவ்வணு மனதோடு கூடினால் அசையுந் தன்மையுள்ளது. மனம் இயற்கையிலே அசையுந்தன்மை யுள்ளது. ஆன்மாவின் உபாதியான மனம் அசைவற்று நின்றாலே ஆன்மாவின் அசைவு ஒழிந்து நிலையாய் நிற்கும். அவ்வசைவு கருணாமூர்த்தியாகிய கடவுளுதவியாலன்றி மற்றெவராலும் ஒழியாது. அசையும் சக்தியுள்ளவற்றை நிறுத்தும் சக்தி கடவுளுக்கே யுரியது. கடவுளுக்கு இச்சை கிரியை ஞானம் எனமூவகைச் சக்திகளுண்டு. இவற்றை முறையே அசைத்தல் இழுத்தல் நிறுத்தல் என்பார் மேலோர். ஞானசக்தியே நிறுத்தும் சக்தியாம். அந்தஞானமே கடவுளின் சொரூபமும். இதனாலேயே கடவுளை இச்சாஞான கிரியாசொரூப னென்று நூல்கள் கூறுகின்றன; கன்மங்கள் மனத்தை ஒடுக்கி மனத்தை நிறுத்துந்தன்மை யுடையன. பலன் தரும் ஆற்றலற்றன. இவ்வாறு ஒடுங்கிநின்ற மனதில் கடவுளின் சொரூபமாகிய ஞானம் நிலைபெறும். அந்தஞானம் ஆன்மாவில் பிரகாசிக்கும். அப்போது மனம் ஆன்மாவிலொடுங்க ஆன்மா பரம்பொருளில் ஒடுங்கும். நிறுத்தும் சக்தியாகிய ஞானத்தில் ஒடுங்கிய ஆன்மா அசைவற்று ஓரே நிலையாய் நிற்கும். அதுவே மோட்ச மென்னப்படுவது. ஆன்மா மனங்களை அசைவற நிறுத்திய கன்மம் நசிக்கும். எதுபோல வெனிற் பசி, நோய்களை நீக்கிய பொருள்கள் தாம் நசித்துப்போவது போலவாம். தன் தொழிலைச் செய்தபின் நசித்துப்போகும் தன்மையுள்ளது மோட்சத்தைப் பயவாது. நசித்துப்போன அரிசி முதலியவற்றின் பயன் சரீரத்தில் நின்று இன்பந் தருவதுபோல கன்மத்தாலாய பயனாகிய ஞானமே மோட்ச இன்பத்தைத் தரும். அந்த ஞானமே பரமான்மாவின் சொரூபமாதலால் பரமான்மாவே மோட்சமளிப்பதாம். ஆதலால் கன்மத்தால் ஞானத்தைப் பெற்று, ஞானத்தாற் பரமான்மாவைத் தரிசித்தலால் வரும்பயனே மோட்சமெனப் படுதலால் பரமான்மாவே மோட்சமளிக்கு மாற்றலுடையவனும். கன்மமோ துணைக்காரணமாய் நிற்கும். அதுபற்றிக்கன்மமும் கடவுளும் மோட்ச காரணப் பொருள்களாம். நிமித்தகாரணமும், துணைக்காரணமு மின்றிக் காரியசித்தி பெறுவது கூடாதாதலால் கன்மத்தையும் கடவுளையும் அனுஷ்டித்தே தீரவேண்டு மென்பது கற்றுணர்ந்த பெரியோர்களின் துணிபா மென்க. இதுபற்றியே "கடவுள் நற்கிரியைகளைச் செய்விப்பான், அவனே தீத்தொழில்களைச் செய்விப்பான், அவனே மேலான பதவியைச் சீவர்களுக்கருளுவான். இவனே ஜீவர்களை யிழிந்த பதவிகளில் விழுத்துவான்" என்று வேதம் கூறுகின்றது. இங்ஙனமாயின் தீயதொழில்களைச் செய்வித்துச் சீவவர்க்கங்களை நரகத்தில் தள்ளித் துன்புறுத்துங் கடவுள் கருணையற்றவனாவான் எனில் கூறுதும்.

கடவுள் எல்லாவற்றிற்கும் சாட்சியாய் நிற்பவர். காந்தம் இரும்பை அசைவிப்பதுபோலப் பிரபஞ்சத்தை யிருந்தவிடத்தி லிருந்தே நடத்துவார். காந்தம் இரும்பை அசைக்கும்போது அவ்விரும்பு வடபுறமோ தென்புறமோ எப்புறம் அசையுமென்று சொல்ல முடியாது. அவ் விரும்புத் துண்டுகளுக்கு ஏற்றவாறு அசையும். அவ்விரும்பு காந்தத்தைவிடச் சிறியதும் சிறிய மூளையு முள்ளதாயின் காந்தத்தை நோக்கியே யசையும். அஃது சதுரமாயின் எப்புறங்கிட்டியதோ, அப்புறமாக அசையும். காந்தத்தைவிட அதிக பருமனாயிருந்தால் இரும்பு அசையாது. இப்படியேகடவுளும் ஜீவான்மாவுமாம். அநேக ஜன்மங்களிற் செய்த புண்ணிய பலத்தால் சுத்தியாயுள்ள

ஆன்மாவைக் கடவுள் தன்னை நோக்கிவர இழுப்பார். கன்மவாசனை ஒழிந்தும் ஒழியாமலு முள்ள ஜீவான்மாவைக் காந்தம் சதுரமான இரும்பை ஓர் புற மிழுப்பதும் ஒருபுறம் விடுவதும்போல இயக்குவார். அதாவது சொர்க்க நரகங்களில் விடுவார். முற்றும் பந்தமொழிந்த ஆன்மாவைத் தாமேதம் மிடம்சேர்த்துக் கொள்வார். பருமனான இரும்பை இழுக்காததுபோல மலநிறைந்த ஆன்மாவை ஒதுக்கிவிடுவார். காந்தம் இரும்பை எப்படிப் பிரேரிபிக்கின்றதோ அதுபோலக் கடவுளும் ஆன்மாவைப் பிரேரிப்பார் என்று கொள்ளவேண்டும். அதுவேயன்றி, கடவுள் ஒருவரைப் பிரியத்தினால் சொர்க்க மோட்சங்களில் வைப்பதும் அப்பிரியத்தினால் ஒருவரை நரகத்தில் தள்ளுவதும் இல்லை யென்பது திண்ணம். கடவுள் எவ்வகையிலும் குற்றப் படமாட்டார். கடவுள் கன்மப்பலனை யளிப்பார் என்பதும் அக்கன்மப் பயன்களை யனுபவிக்கத்தக்க சரீரத்தைக் கொடுப்பாரென்பது முண்மையாம். கன்மப்பயனுக்கேற்ற சரீரத்தைக் கொடுப்பது கடவுளிடத் தமைந்த சக்தியாதலால் கடவுளின்றி எதுவும் சித்தியாகாதென்க.

ஆனால் கன்மத்தைத் தவிரக் கடவுளுக்குப் பிரியத்தை யுண்டாக்கத் தக்கது மற்றொன்றும் கிடையாதோ வென்று ஓர் கேள்விகேட்பார் சில்லோர்; இதன் கருத்து என்னவென்றால், கன்மத்தைத் தவிர வேறொன்றுண்டாயின் அது கொண்டே முத்தியடையலாமே. கஷ்டமான கன்மத்தை அனுஷ்டித்து என்வருந்தவேண்டு மென்பது.

கன்மம் என்பதைத் தொடங்கும்போதே, கன்மங்களெல்லாம் மலரூபமாய்ச் சரீரத்தைப்பற்றி நிற்குமென்றும், அது ஒழிந்தாலன்றி யானமா சுத்திபெறா தென்றும் கூறினோம். அக்கன்மபலத்தை ஒழிப்பதற்கு கன்மஞ் செய்வது இன்றி யமையாததென்று கூறினோம். சாயுஜ்யபதவியை யடைந்தவனுக்குக் கன்மம் விட்டொழிக்கத் தக்கது. மற்றவனுக்கு முடியாது. ஏனெனில் கன்மஞ்செய்யாதவன் ஒருவனுமில்லை. அது பாபமாகவாவது புண்ணிய மாகவாவதுதா னிருக்கும். கனமத்தைக் கன்மத்தாற் போக்க வேண்டுமேயன்றி வேறெதனாலு மாகாது. ஆதலால் எல்லாரும் சற்கருமத்தை அனுஷ்டித்தே தீரவேண்டும். (தொடரும்)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

பகவத்கீதை வசனம்

(229-ம் பக்கத் தொடர்ச்சி)

(பகவான் தாம் அகர்த்தாவே யென்பதை யறிவிக்கிறார்.)

ஏ பார்த்தா ! நானே மாயையால் (சத்துவாதி குணங்களின் பேதத்தாலும், சமதமாதி கருமங்களின் பேதத்தாலும் பிராம்மணாதி நான்கு வருண பேதமாக) சிருஷ்டித்தேன். நானே இரட்சிப்பேன். அவ்வாறு நான் செய்யினும் மயக்கததிற் கேதுவான கர்மபலன்களில் இச்சைவையேன் ஆதலால் அக்கர்மங்கள் எனக்கு அன்னியமாகவே யிருக்கும். என்னோடு சம்பந்தியா. இவ்வாறாக என்னை யறிபவரும் என்போலவே கர்மத்தினின்றும் விடுபடுவார்கள்.

இவ்வாறு ஆன்மாவை அகர்த்தா அபோக்தாவாக அறிந்து கர்மபலத்தில் இச்சைவையாது கர்மத்தைச் செய்தி.

(சத்துவாதி குணங்களின் பேதத்தாலும் சமதமாதி கருமங்களின் பேதத்தாலும் ஜாதிபேதம் ஏற்பட்டது என்று பகவான் அருளியது கவனித்துணரத்தக்கது) சத்துவகுணப் பிரதானமாக வுடையவர்கள் பிராம்மணர்கள். சத்துவ குணத்தை அப்பிரதானமாகவும் இரஜோகுணத்தைப் பிரதானமாகவும் உடையோர் க்ஷத்திரியர்கள். தமோகுணத்தை அப்பிரதானமாகவும் இரஜோகுணத்தைப் பிரதானமாகவும் உடையோர் வைசியர். தமோகுணத்தையே பிரதானமாக வுடையோர் சூத்திரர்கள்.

பிராம்மணர்களுக்கு சமதமாதி கர்மங்களும், க்ஷத்திரியர்க்கு வீரம் பொருந்திய தருமயுத்தம் செய்தலும் பிரஜா பரிபாலனமுமாகிய கர்மங்களும், வைசியர்க்கு கிருஷி வாணிபம் முதலிய கர்மங்களும், சூத்திரர்க்கு மற்ற மூவருணத்தவர்க்கும் ஊழியம் செய்வதாகிய கர்மமும் விதிக்கப் பட்டன.

(பகவான் கர்மம் அகர்மம் என்றவற்றைப் பற்றிக் கூறுகிறார்.)

ஏ பார்த்த! கடந்த யுகங்களில் எல்லாமுணர்ந்த முமூட்சுக்களான ஜனகனாதியோர் பலேச்சையின்றிச் செய்யும் கர்மங்கள் பந்தத்தை யுண்டாக்கமாட்டா வென்பதை யறிந்து வருணாச்சிரம கர்மங்களை யநுஷ்டித்தார்கள். நீயும் அவ்வழியில் ஒழுகுவாய். கர்மம் எது, அகர்மம் எது என்பதன் உண்மையை யறிவதில் கற்றுணர்ந்த வித்வான்களும் மயக்கமடைகிறார்கள். சில அறிஞர் சாத்திரங்களில் செய்ய வேண்டுமென்று விதித்தது கர்மமென்றும், செய்யத்தகாத தென்று விலக்கப்பட்டது அகர்மம் என்றும் கூறுகின்றனர். அவற்றின் உண்மையான சொரூபம் இன்னதென்று அறிவது அருமை. அவற்றின் செயலை யியம்பக் கேட்பாயாக.

ஆற்றில் ஓடத்திற் செல்லும் ஒரு புருடன் கரையில் நிற்கும் மரங்கள் ஓடுவதைப்போல் காண்கிறான். கரையில் இருக்கும் விருக்ஷங்கள் எப்போதும் ஓடாமல் நிலைத்தே நிற்பவையென் றுணர்ந்த அறிவாளி நாமே ஓடத்திலோடுகிறோம் என்று உணர்கிறான்:

உண்மையில் தேகம் இந்திரியம் புத்தி யிவற்றின் வியாபாரமே கருமமாம். அது தேகேந்திரியாதிக ளிடத்திலேயே யுண்மையில் உளதாம். விசாரணையில்லாதவன், அதை 'நான் செய்கிறேன்' என்று ஆன்மாவின் கண் ஆரோபணம் செய்கிறான். இவனே ஓடத்தில் தான் ஓடும்போது கரையிலுள்ள மரம் ஓடுவதாகக் காண்பவன். தேகேந்திரியாதிகளிடமே கருமம் இருப்பினும் 'நான் சும்மாவிருக்கிறேன், ஒரு கருமமும் செய்யவில்லை' என்ற அத்தியாசத்தால் கர்ம மில்லாததுபோல தோற்றுகிறது.

இவ்வாறு கருமமுடையதாய்த் தோற்றும் ஆன்மாவினிடம் அகர்மத்தையும், அகர்ம முடையனவாய்த் தோற்றும் தேகேந்திரியாதிகளிடம் கர்மத்தையும், அதாவது கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காண்பவனே மனிதரில் அறிவாளியும், யோகத்தோடு கூடியவனும் கிருதகிருத்தியனுமாவான்.

சாத்திரத்தில் விதித்துள்ளவை கருமமாம்; நிஷேதித்துள்ளவை விகருமமாம்; எவ்வித வியாபாரமுமின்றிச் சும்மாவிருத்தல் அகருமமாம்; இவற்றின் உண்மையை நீ யறிய வேண்டும்.

ஆன்மா கர்த்தா போக்தாவன்று, கருமம் தேகேந்திரியாதிகளைப் பற்றியதே யென்றுணர்ந்து கர்மபலனில் இச்சைவையாது கருமத்தை யியற்றின் பந்தமுண்டாகாது. அவனே கர்மத்தில் அகர்மத்தைக் காண்கிறவனும். கர்த்திருத்வ அபிமான மற்றவிடத்துத்தான் கர்மம் பந்தத்தை யுண்டாக்காது. அந்த அபிமானம் இருந்துகொண்டே யிருக்கையில் நான் சும்மா இருக்கிறேன் என்று உதாசீனமாயிருத்தல் கருமமேயாகும். அதுபந்தந் தரும்.

ஆகையால் ஏ பார்த்தா! கருத்திருத்வ அபிமானம் விடுத்து பலேச்சையற்று சுபகருமத்தைச் செய்வாயாக.

[இத்தகைய அறிவாளி செய்யும் கருமங்களனைத்தும் உலக நன்மையின் பொருட்டும் சரீரஜீவனமாத்திரத்தின் பொருட்டுமே யாதலின் அவை பிராரப்த கர்மவசத்தால் நடைபெறுவன வாதலின் பந்தத்தை யுண்டாக்கத் தக்கவை யாகாவாம்]

எவனுடைய சர்வகர்மங்களும், கர்த்திருத்வமும், ஆசையும் ஞானத்தீயினால் தகிக்கப்பட் டொழிந்தனவோ அத்தகையோன் பிறப்பிறப்பை யொழித்த முக்தனும். அவ்வாறு நிலையில் நின்று கருமங்களைச் செய்பவன் கருமத்தால் நாம்மேல் அனுபவிக்க வேண்டிய பலன் உண்டென்று மறந்தும் கருதான். இகபரபோக இச்சையற்று, ஒடுங்கிய இந்திரியங்களோடு சித்த நிரோதனத்தை யுடையவன் சரீரஸ்திதியின் பொருட்டு பிராரப்த வசத்தால் செய்யும் கருமங்கள் அவனைப் பந்திக்கமாட்டா. அவன் பிரத்தியட்சத்தில் கிடைத்த ஆகாரத்தைக் கொண்டு திருப்தியடைபவன்; சுகதுக்கத்தில் சமதிருஷ்டி யுடையவன்; காமக்குரோதாதிக ளற்றவன்.

மேலும் கர்த்திருத்வ அபிமானம் விடுத்து பலாபேக்ஷையற்று ஆன்ம சாக்ஷாத் காரத்தில் பதிந்த சித்தமுடைய அந்த ஞானபுருஷன் செய்யும் எக்ஞாதி கர்மங்களும் பலத்தோடு நாசமாகுமேயன்றி மேல் அனுபவிப்பதற்கு எஞ்சிநிற்கா.

யாவும் பிரம்மசொரூபமே யென்றுணர்ந்து பிரம்ம சாக்ஷாத்கார மடைந்தோர் பிரம்மரூபமாகிய அக்னியில் பிரம்மரூபமான மந்திரத்தால் பிரம்மரூபமான அவிசைப் பெய்தபின், பரமானந்த சொரூபமாகிய பிரம்மத்தையே யடைவார்கள். சிலர் பிரம்மரூபமாகிய அக்னியில் பிரத்யகான்மாவையே ஓமம் செய்வர். சிலர் நிவர்த்தி செய்யத்தக்க இந்திரியாதிகளை ஓமஞ்செய்வர். சில யோகிகள் சப்தாதி விஷயங்களைச் சுரோத்திராதி இந்திரியரூபங்களான அக்னியில் ஓமம்செய்வர். சிலர் இந்திரியங்களின் தொழில்களையும் பிராணாதி வாயுக்களின் தொழில்களையும் விவேகமாகிய நெய்யைச்சொரிந்து யோகமாகிய அக்கினியில் ஆகுதிசெய்வார்கள். இத்தகையோரெல்லாம் பாபங்களினின்றும் விடுபட்டவராவர்.

இப்போது நாம்கூறிய இவையாவும் வேதத்தில் கூறப்பட்டுள்ளனவேயாகும். வேதத்தில் பிரதிபாதிக்கப் பட்டதாக நாம் கூறிய எல்லா எக்ஞங்களைக் காட்டிலும் ஞான எக்ஞமே மிக்க சிரேஷ்டமானது. மேற்கண்ட எல்லா எக்ஞங்களினு முன்ன இச்சையையொழித்து ஞானத்தையடையத் தக்க உபாயம் யாதெனின் கூறுதும் கேட்பாய்.

(பகவான் ஆன்ம ஞானமடையும் மார்க்கத்தை யருளிச்செய்கிறார்.)

ஏ! தனஞ்செய! அபரோக்ஷ ஞானானுபவரான ஆசாரியனையடைந்து பக்தியோடு சேவைசெய்து "பகவானே! இத்துக்கரூபமான சம்சார சோகத்தினின்றும் விடுபடத்தக்க ஞானத்தை யடியேற்கருளல் வேண்டும்" எனப் பிரார்த்தித்தால் அவர் தொம்பத இலக்ஷியார்த்தமான பிரத்யேகான்ம தரிசனம் உனக் குண்டாகச்செய்து பிறகு தத்பத இலக்ஷியார்த்தமான என்னிடத்து உன்னை யபேதமாயறியும் வண்ணம் அநுக்கிரகம் செய்வார்" என்றருளினார்.

இவ்வாறடையும் ஞானத்தால் யாதுபயன் என்று வினவிய அர்ச்சுனனை நோக்கிப் பகவான் அருளிச் செய்கிறார்:—

"ஏ பார்த்த? இந்த ஞானத்தால் என்ன பயனெனின், எத்தகைய பாதகங்களாகிய வினைச் சாகரத்தில் வீழ்ந்துத் தத்தளிப்பவனாயினும், ஒருவன் இந்த அபேத ஞானமென்னும் தெப்பத்தால் சுலபமாய் முத்தி யென்னும் கரைசேரலாகும். அது எவவாறெனின். பெருந்தீப் பிடித்தெரியும் கானகத்தில் எத்தகைய விருக்ஷமாயினும் தகிந்து சாம்பராய் விடுமேயன்றி எதுவும் தப்பிநிற்காது. அதுபோல் விசாரத்தால் ஜனித்த ஞானாக்னியானது புண்ணிய பாபமாகிய கர்மக்கூட்டங்க ளனைத்தையும் நீறாக்கிவிடும்.

எத்தகைய கர்மத்தையும் அடியோடழிப்பதில் ஞானத்திற்குச் சமமானது எதுவுமின்றாம். இத்தகைய ஞானத்தைக் கருமயோகத்தை யனுஷ்டிப்போன் நெடுநாட்களுக்குப்பின் சித்த சுத்தியடைந்து அத்துவாரா தானே அந்தக் கரணத்தி லடைவன். நல்வினைகளையே செய்துகொண்டிருப்பவருள்ளும் குரு சாஸ்திரங்களினிடத்து சிரத்தாபக்தியுடையோரும் ஈசுரபக்தி யுடையோரும் ஐம்புலன்களை யடக்கியவர்களுமானோர் சில நாட்களிலேயே ஞானத்தை யடைவார்கள்.

குருவாக்கையும் சாத்திரார்த்தங்களையும் அறிந்து கொள்ள மாட்டாத மந்தரும், எவ்வாறு உபதேசித்தாலும் சந்தேகங் கொள்வோரும், குருசாஸ்திரங்களில் பக்தி யில்லாதோரும், நாஸ்திகரும் ஞானத்தை யடையார்கள். இவர்கள் இகபரமிரண்டினும் பயனடையார்கள்.

சுகதுக்காதிகளில் சமத்வபுத்தி கொண்டு சகல கருமங்களையும் ஈசுரார்ப்பணம் செய்தோரும், ஆன்ம சாக்ஷாத்கார ஞானத்தால் சகல சமுசயங்களையும் சேதித்தோரும் துறவிகளேயாவர். அவர்களைக் கருமம் பற்றாது.

ஆதலின் ஏ! அர்ச்சுனா! நீயும், அஞ்ஞானத்தினின்றும் உண்டாகி உன் புத்தியினிடத்தே வளர்ந்துள்ள சமுசயத்தை ஆன்ம ஞானமாகிய கட்கத்தால் சேதித்தொழித்து நிட்காம கருமத்தைச் செய். இக்காரணத் தானே உனது தருமமாகிய போரைச்செய்யத் தொடங்குவாயாக" என்றருளினார் உறியிலுள்ள நவநீதத்தையும் இவ்வுலகத்தையுமே உண்ட திருவாயையுடைய பகவான்.

நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

(தொடரும்.)

சீடன்.

புராதன இந்திய நன்னாடு.

நேயர்களே! முன்னீர் முழுதினையும் மேகலையாக் கொண்ட விம்மேதினி யெங்கணும் ஒரு கால் பேரும் பெருமையும் பெற்றுச் சீர்த்தி மல்கிச் சிறப்பு விளங்க ஒப்புயர்விலாது பொலிவுபெற் றிருந்தது நம்மிந்திய நன்னாடு. அக்காலத்து இது நாடுகட்கெல்லாம் நடுநாயகமாய் விளங்கியது. இதற்கு இந்தியா வென்ற பெயர் எப்படி வந்தது என்று ஆராயப்புகின், அருகில் நின்றோர்க்கு அச்சத்தைக்கொடுப்பதும், கண்டவர்க்குக் கம்பலையை விளைப்பதும், எண்ணிடக்கூடாத பிரவாக வேகமுள்ளதும், புண்ணிய நதிகள் பலவற்றுள் முன்னாட்டிக் கூறப்படும் சிறப்பினை யுடையதும், வட இந்தியாவை யலங்கரித்துக் செல்வதுமாகிய ஸிந்து வென்ற புராதன நதி நமது நாட்டின் வடமேற்குப் புறத்தில் செல்வதால்தான். இஃதன்றி, சந்திர குலத்துக்கே யொரு சூடாமணி போன்ற பரதனென்ற நெடுமுடி மன்னன், மன்னுயிரைத் தன்னுயிராகப் போற்றி, நிலவுலகுக்கெல்லாம் நன்மை விளைத்து, எவ்வாற்றானும் தனது பிரஜைகட்கு நேர்ந்த துன்பங்களைத் துடைத்து, செங்கோல் வளங்குன்றாது அரசாண்டு வந்த நாடாதலின் இதற்குப் பாரதகண்டம், பரதநாடு என்ற பெயர்களும் உள.

(2) அறிவாளர்களே! பெயரினால் மட்டுமே இத்துணை பெருமை படைத்த நம் நாட்டின் கீர்த்தியைப் புல்லறிவுடைய யான் சொல்ல வொண்ணுமோ? அன்றி, அப்பேருரகமாய ஆதிசேடன்தான் அதைப்பற்றிச் சிறிதளவேனும் சொல்ல வியலுமோ? இயலாது, இயலாது. ஆயினும், எனக்குத் தெரிந்தவரை, எனது புல்லறிவுக் கெட்டின மட்டில் நம் நாட்டின் பூர்வப் பெருமையை, நேரும் நிகருமற்ற சீர்த்தியை, சிறிதளவு சொல்லி இவ்வியாசத்தை முடிப்பேன்.

(3) உண்மை யறிவு பொலியும் உத்தம சிலரே! இற்றைக்குச் சற்றேறக்குறைய மூவாயிரம் நாலாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நமது நாட்டின் நிலைமையையும், இப்போழ்து அது வகிக்கும் ஸ்தானத்தையும் ஒப்பிடுமிடத்து, நம் நாட்டின் தறகால ஈன ஸ்திதியைக் குறித்து வருந்தாதவர் ஒருவருமிரார் என்பது திண்ணம். 'மானங் குலங் கல்வி வண்மை யறிவுடைமை தானந்தவ முயற்சி தாளாண்மை தேனின்—கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும், பசிவந் திடப்பறந்து போம்' என்ற அரிய செய்யுளும் பொய்க்குமோ? ஆம்! நம் தற்கால வறுமை காரணமாகப் பசி முற்றி நம்மைப் பல்காலும் வருத்த அவையாவும் பறந்தன போலும்.

(4) நிற்க, இந்நாளில் நவீன நாகரீகம் நலம் பெற விலங்கும் பல நாடுகள் நாடுவாரின்றிப் பாழாய்க்கிடந்த காலமும், பிறதேயத்தவர்கள் உண்ண உணவும் உடுக்க உடையும் தயாரிக்க வறியாது நிர்வாண சரீரிகளாய், வர்ணம் பூசித்திரியும் காலமுமாகிய வப்புராதன காலத்தில் நம்மிந்தியா, கைத்தொழிலிலும் வாணிபத்திலும், கல்வியிலும், நாகரீகத்திலும், ஈடுமெடுப்பு மற்று உலகெங்கும் பொலிந்து விளங்கியது. அவ்வாறாயின் செல்வத்தில் நிகரற்றது அதுவென்று சொல்லவும் வேண்டுமோ"

(5) இஃதன்றி, ஏனைய தேயத்தவர்கள் கொஞ்சமும் இரக்கமென்பதின்றிப் பிராணிகளையும், மனிதர்களையும் கொன்று ஜீவித்து வருநாட்களில் நமது இந்தியர்கள், தானம், தவம், வள்ளன்மை, ஆதியவற்றின் பெருமை

கலை யறிந்து அவைகளின் வழி நின்றதன்றி, கொலை, களவு, புலாலுண்ணல், கட்குடித்தல், பொய்யுரைத்தல், பிறரில்லம் நயத்தல், முதலியவைகளைப் பெரும்பாதகங்களாக மதித்து, அவைகளை அறவேகடிந்து தேசுற்றுத் தருமசீலராய் விளங்கி வந்தனர். இவைகளால் நமது நாட்டின் பெருமை நன்கு விளங்கும். இவையன்றி, சத்தியமே நித்தியமெனக் கொண்ட அரிச்சந்திர மன்னர் முதலியோரும், கேட்டோர்க்குக் கேட்டவாறு வரையாது கொடுக்கும் வள்ளன்மையே தெய்வ முள்ளளவும் குறையாப்பேறென்று மதித்த கன்னன் சிபி முதலிய முடிவேந்தர் பலரும், மன்னுயிரைத் தம்முயிராய்ப் பாராட்டிப் பரிவுடனே அவர்கட்கு நேர்ந்த இடுக்கண்களைப் பலவகையாலும் துடைத்துத் தமது செங்கோல் வளத்துக்குப் பழுது வாராதவாறு காத்துக் கொண்ட சேர சோழபாண்டியராதி விறல்வேந்தரும் ஆண்டநாடு இதுவாகும். குட முனிவராகிய அகத்தியர் முதலாய உலகப்பற்றை முற்றத் துறந்த வுண்மை விருடிகள் பலர் இருந்த நாடும் இதுவே. கற்புக் கணிகலன் போன்ற காரிகைகள் வதிந்த நாடும் இதுவே. பொற்பு வாய்ந்தபூவையர் பலர் பொதிந்த நாடும் இதுவே. கோதற்ற கோமகளிர் களியாட்டுடனிருந்த நாடும் இதுவே. களங்கமற்ற கலை மடந்தையர் பொருந்திய நாடும் இதுவே. மாசற்ற மடமங்கையர் மன்னியநாடும் இதுவே. நாற்பத் தொன்பதின்மர் நாவலர் நலமுடன் நற்றமிழ் நிறுவின நாடும் இதுவே. இத்தகைமைத்தான இவ்விந்தியாவின் மாட்சியை முழுதும் வரைவதென்பது இயலாததாகலின் சில வரை யறைகளின்படி, எனது சிற்றறிவுக் கெட்டின வரை இம்மட்டிலா மாணாட்டின் பெருமைகளை ஈண்டுக் கூறுகின்றேன். அப்பிரிவினைகள் கீழ்க் கண்டவாறு.

1. புராதன இந்தியாவின் வாணிபமும் கைத் தொழில்களும்.
2. இந்தியக் கல்வியும் நாகரீக மேன்மையும்.
3. இந்து மாது சிரோன்மணிகள்.

(6) தெள்ளறிவு வாய்ந்த ஒள்ளிய ஐயன்மீர்! இப்பொழுது இவற்றில் முதல் பிரிவினையைச் சிறிதளவு ஆராய்வாம். நாம் எல்லோரும் இவ்விந்தியா மிகத்தொன்மை வாய்ந்த தேசம் என்று அறிவோம். அவ்வளவு தொன்மை வாய்ந்த இந்நாடு எக்காலத்தும் எல்லா வளப்பங்களும் நிறைந்ததென்பதை ஒருவராலும் மறுக்கவியலாது. நீர் நிலவளங்களில் இந்நாட்டுக்கு மேம்பட்டது அல்லது ஈடானது ஒருநாடேனுமில்லை. ஏனைய நாடுகளில் முக்கியமான நதிகளுக்குக் கிளைநதிகள் வெட்டிச் சாகுபடி செய்யவேண்டிய அவசியம் உண்டு. ஆனால் இந்நாட்டிலோ வெனில் ஒவ்வொரு பெரிய நதியும் தானாகவே பல கிளை நதிகளை உற்பத்திசெய்து அவைகளின் மூலமாகச் சென்று கடலிற் கலப்பதால் கிளை நதிகள் வெட்டவேண்டிய அவசியமேயில்லை. இவை யன்றிச் சிலநதிகள் வருஷம் முழுதும் வற்றாது ஓடிக் கொண்டிருப்பதனால் அந்நதிகளைச் சேர்ந்த பாகங்களில வருஷம் முழுதும் சாகுபடி செய்யலாம். இதனால் இந்தியாவுக்கு நீர் வளம் போதாதென்பதற்கு ஆதாரமேயில்லை; அன்றியும் தக்ஷிண இந்தியாவிலே கொஞ்சம் உஷ்ணம் அதிகமிருப்பினும் வடநாடு சமசீதோஷ்ணம் வாய்ந்தது. இந்நாட்டில் எல்லா விளை பொருள்களையும் பயிரிடலாம். ஏனெனில் சமசீதோஷ்ணப் பிரதேசங்களில் அவைகளுக்கேற்ற விளை பொருள்களையும் உஷ்ணப் பிரதேசங்களில் அவைகளுக் கேற்ற விளைபொருள்களையும் விதைத்

தால் இவ்விருவகைப் பிரதேசங்களுக்குரிய விளை பொருள்களும் முட்டின்றி விளையுமன்றோ? இதனால் நம் நாட்டில் நிலவளத்துக்கும் குறைவு ஒன்றுமில்லை என்பது தெற்றென விளங்கும்.

(இன்னும் வரும்.)

சி. சீனிவாச ராகவன்,
48. பக்தபுரி அக்கிரகாரம், கும்பகோணம்.

தபால் கொள்ளைக்காரர்கள்

(238-ம் பக்கத்தொடர்ச்சி)

வண்டி புறப்பட்டதே சாமிநாதன் மெயில் ஏஜண்டாகையால் தன் வேலை செய்யும் மேஜைக்குச்சென்று உட்கார்ந்தான். எதிரில் மேஜைமேல் துண்டு கடிதம் இருந்தது. அதில் பின் வருமாறு தெளிவாய் எழுதப்பட்டிருந்தது :—

"கள்ளர்களே. இனி நடக்கப்போவது உயிர்ச்சண்டையே. எச்சரிக்கை" இதைக்கண்டதே யவர்களுக்குப் பேரிடி விழுந்த மாதிரியாய் விட்டது.

ஆனந்தஸிங் மேல் கண்டவாறு அவர்களுக்குப் பயமுண்டாகச்செய்துவிட்டு ஸ்டேஷன் மாஸ்டரிடமிருந்து பெற்ற சாவியால் மெயில் வண்டியின் கதவைத் திறந்துகொண்டு சென்று அச்சீட்டைச் சாமிநாதன் மேஜைமேல் வைத்துவிட்டு மறைந்துகொண்டான். பிறகு அவன் மேலையூரிலுள்ள பிரதான ஹோட்டலில் மாறுவேட மணிந்துகொண்டு தங்கினான். இப்போது அவனுக்கு ஒரு விஷயமாய் ருசுக்கள் வேண்டும். இரங்கநாதன் தற்சமயம் அந்த ஹோட்டலில்தான் வசித்துக்கொண் டிருக்கிறான். ஆகையால் தானும் அவன் அறைக்குப் பக்கத்து அறையிலேயே தங்கினான்.

ஆனந்தஸிங் இரண்டு நாள் தங்கியும் இரங்கநாதன் வரவில்லை. மூன்றுவது நாள் மாலை கீழ்க்கட்டிலிருக்கும் பெரிய கூடத்திற்குள் வந்து நுழைந்தான். அங்கு குடிவகைகள் விற்பது. அச்சமயம் ஆனந்தஸிங்கும் அங்குதான் நின்றுகொண் டிருக்கிறான். ஆனால் அவன் அணிந்திருக்கும் மாறுவேடத்தின் சாமார்த்தியத்தால் அத்துஷ்டன் அவனை யறிந்துகொள்ளவில்லை. நோய் சாராயம் விற்பவனிடம் சென்று தனக்கு வேண்டியதை வாங்கிக்கொண்டு பத்து நிமிடங்களுக்குள் தன்னறைக்குச் சென்று உட்கார்ந்து சுருட்டுப்பிடிக்க ஆரம்பித்தான். அறையை யுள்பக்கம் தாளிடாமல் கதவை மட்டும் மூடிக்கொண்டான். இதனால் இவன் யாருடைய வரவுக்காகவோ எதிர் பார்க்கிறானென்று ஆனந்தஸிங் தெரிந்துகொண்டான்.

சுமார் கால்மணி நேரம் கழித்து யாரோ வந்து கதவைத் தட்டினார்கள். இரங்கநாதன் எழுந்து செல்லாமலே "வாருங்கள் உள்ளே" என்றான். உடனே சாமிநாதனும் கள்ளத்தலைவனாகிய ஜக்கனும் உள்ளே நுழைந்து கதவைமூடித் தாளிட்டுக் கொண்டார்கள்.

சாமிநாதன் இரங்கநாதனை நோக்கி "நண்பரே வந்தனம். சரியான வேளைக்கு வந்துவிட்டோம்."

இராங்:—“நான் கூறவேண்டிய சங்கதி யவ்வளவு முக்கியமானது; அதனால் நீங்கள் சீக்கிரம் வந்ததைப்பற்றி சந்தோஷப்படுகிறேன்” என்றான்.

சாமி:—“அப்படிப்பட்ட சங்கதியாயின் உடனே கூறுவதுதானே! நானும் என் நண்பரும் ஆயத்தமாயிருக்கிறோம்.” என்றான்.

இராங்:—“ஆம் நான் உங்களை வரவழைத்தது மிக்க முக்கியமான விஷயமே. அது நமது எதிர் கால க்ஷேமத்தைப் பொருத்தது. நம்முடைய நிலைமை யிப்போதிருக்கும் ஆபத்தான நிலைமையைப்போல் எப்போதும் இருக்கவில்லை.” என்றான்.

இதைக்கேட்ட துஷ்டர்கள் இருவரும் திடுக்கிட்டு ஒரேகுரலாய் “ஏன்? அப்படிப்பட்ட காரணம் என்ன விருக்கிறது?” என்றார்கள்.

